**நாவலர்**
சித்தன்கேணி
O/L
வார இறுதி வகுப்புக்கள்
கணிதம் — திரு. U. குணம்
விஞ்ஞா — திரு. J. R. சூரி
— திரு. G. ஈசன்
சமூ.கல்வி— திரு. சண்
ஆங்கிலம் — திரு. தெய்வர்
தமிழ் — திரு. கணேஸ்
வர்த்தகம்— திரு,S-T.குமார்



பக்கங்கள் எட்டு — விலை ரூபா:- 3-00

# முரசொலி

முரசு 04 ஒலி 107 புதன் 23-05-1990 (வைகாசி 09) ஷவ்வால் 27



**நாவலர்**
பண்டத்தரிப்பு
O/L
வார இறுதி வகுப்புக்கள்
கணிதம் — திரு. U, குணம்
விஞ்ஞா — திரு. G. ஈசன்
திரு. J. R. சூரி
சமூ. கல்வி — திரு. செல்வா
ஆங்கிலம் — திரு. தெய்வர்
தமிழ் — திரு. கணேஸ்
வர்த்தகம் —திரு.S.T.குமார்


## பாடசாலைகளில் உடன் எழுத்துச் சீர்திருத்தம்

உடனடியாக இலங்கையில் உள்ள சகல தமிழ்ப் பாடசாலைகளிலும் தமிழ் எழுத்துச் சீர்திருத்தத்தை அமுல்படுத்தும்படி உயர் கல்வி அமைச்சு சுற்று நிருபம் மூலம் அறிவித்துள்ளது.

இச்சுற்று நிருபம் மாகாண கல்விச் செயலாளர்களுக்கும், மாகாண கல்விப்பணிப்பாளர்களுக்கும், கல்விவெளியீட்டுத்திணைக்கள ஆணையாளருக்கும், பரீட்சைத் திணைக்கள ஆணையாளருக்கும் அனுப்பிவைக்கப்பட்டுள்ளது.

சீர்திருத்தப்பட்ட 13 எழுத்துக்களை உடனடியாகப் பாடசாலை மாணவர்களுக்கு அறிமுகப்படுத்தும்படியும், மூன்று ஆண்டுகளுக்குப் பழைய எழுத்துக்கள் எழுதுவோர் பாதிக்கப்படக் கூடாதென்றும். வினாத்தாள் போன்ற சகல விடயங்களுக்கும் புதிய எழுத்துக்களை பிரயோகிக்கும்படியும் சுற்று நிருபத்தில் கேட்கப்பட்டுள்ளது. (03)

# பேச்சை விடுத்து செயல் தேவை

# ஹமீத்திடம் புலிகள் வலியுறுத்து

## தாமதம் ஏற்படின் பாரிய விளைவுகளும் சிக்கல்களும் ஏற்படும் என எச்சரிக்கை

**தொடர்ந்து வெறுமனே பேச்சுக்களை நடாத்துவதை விடுத்து உருப்படியான நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு விடுதலைப் புலிகள் அரசைக் கேட்டுள்ளார்கள்.**

நேற்று நல்லூரில் நடைபெற்ற அமைச்சர் ஹமீத் விடுதலைப்புலிகள் சந்திப்பின் போதே மேற்படி விடுதலைப் புலிகளால் அரசிடம் கேட்கப்பட்டுள்ளது.

6வது திருத்தச்சட்ட மூலத்தை நீக்க விரைவில் நடவ

— 08 ஆம் பக்கம் பார்க்க

## வட,கிழக்கு பாதுகாப்பு குறித்தும் நேற்றுப் பேச்சு

நேற்று நடைபெற்ற விடுதலைப் புலிகள் - அமைச்சர் ஹமீத் பேச்சுக்களின் போது வடக்குக் கிழக்கின் பாதுகாப்பு பிரச்சினை குறித்து ஆராயப்பட்டது.

அரசு வடக்குக் கிழக்கில் ராணுவ முகாம்கள் பலப்ப

— 08 ஆம் பக்கம் பார்க்க

## ஜனாதிபதியின் பதிலுடன் ஹமீத் மீண்டு வருவார்

அமைச்சர் ஹமீத் விடுதலைப் புலிகளிடம் பேச்சுக்களை நடாத்த மீண்டும் அடுத்த வாரம் இங்கு வரவுள்ளதாக தெரியவருகின்றது:

நேற்று விடுதலைப் புலிகளினால் வலியுறுத்தப்பட்ட அம்சங்கள் குறித்து இலங்கை ஜனாதிபதியின் பதிலை விடுதலைப் புலிகளிடம் தெரிவிக்கவே அடுத்தவாரம் இங்கு வருவார் என விடுதலைப் புலிகள் வட்டாரங்கள் தெரிவித்தன.

## தேர்தலில் மற்றைய இயக்கங்கள் போட்டியிட புலிகள் ஒருபோதும் தடையாகவில்லை

ஜனநாயக தேர்தல் ஒன்று நடைபெறுமானால் சகல கட்சிகளும், இயக்கங்களும் போட்டியிடுவதற்கு விடுதலைப் புலிகள் அனுமதிப்பார்கள் என்று விடுதலைப் புலிகள் தெரிவித்துள்ளனர்.

வடக்கு கிழக்கில் இயக்கங்

—08ஆம் பக்கம் பார்க்க

## ஜனாதிபதி ஈ. பி. ஆர். எல். எப். பேச்சு நடைபெறாது

ஜனாதிபதி பிரேமதாஸ ஈ. பி. ஆர். எல்.எப். புடன் பேசவுள்ளதாக வெளிவந்த செய்திகளை அமைச்சர் ஹமீத் மறுத்துள்ளார்.

இத்தகைய பேச்சுவார்த்தை விடுதலைப் புலிகளுக்கும் அரசிற்குமிடையிலான உறவுகளைப் பாதிக்குமென்று அமைச்சர் ஹமீத்திடம் விடுதலைப்புலிகள் வலியுறுத்தி

—08 ஆம் பக்கம் பார்க்க

# வடமராட்சி கடலில் பீரங்கி, ஷெல் தாக்குதல்

வடமராட்சிக் கடலோரப் பகுதியில் சீப்பிளேன் ரோந்தும் இரவு வேளைகளில் ஹெலிக் கொப்டர் ரோந்தும் ஆரம்பித்து விட்டன.

நேற்று முன்தினம் வடமராட்சியில் முக்கிய கேந்திர நிலையங்களான வல்வெட்டித்துறை, பொலிகண்டி, தொண்டமனாறு போன்ற பகுதிகளைச் சுற்றி சீப்பிளேன் தாழப்பறந்து பலமணி நேரமாகநோட்டமிட்டபடிரோந்து சேவை புரிந்தது.

மேற்படி நடவடிக்கைகளால் மீனவர் பலர் மீன்பிடிக்கச் செல்லாததுடன் இரவுவேளைகளில் உள்ளூர்ப் பகுதிகளில் தஞ்சமடைந்து வருவதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

—08 ஆம் பக்கம் பார்க்க

## புலிகள் - ஹமீத் பேச்சு 5 மணி நேரம் நடந்தது

நேற்று அமைச்சர் ஹமீத்துக்கும் விடுதலைப் புலிகளுக்கும் ஐந்து மணி நேரப் பேச்சுகள் இடம்பெற்றன. நல்லூர்ப் பகுதியில் உன்ள வீடொன்றில் காலை 10 மணிக்கு ஆரம்பமான பேச்சுவார்த்தை பிற்பகல் 3-30 வரை நீடித்தது. ஹமீத்துடன் இடம்பெற்ற பேச்சுக்களின்போது வி. பு. ம. முன்னணித் தலைவர் மாத்தயா செயலாளர் யோகி, அரசியல் ஆலோசகர் அன்ரன் பாலசிங்கம், திருமதி

— 8 ஆம் பக்கம் பார்க்க

## தமிழ் மொழி அமுலாக்கல் மனோகரி நடவடிக்கை

எதிர்காலத்தில் அலுவலகத் தொடர்புகளை தமிழில்வைத்துக்கொள்ளுமாறு மத்திய, மாகாண அமைச்சு மாவட்ட கோட்ட கல்வி அலுவலக கடிதத் தொடர்பு ஏதும் தமிழில் இல்லாது வேறு மொழியில் வந்தால் அக்கடிதத்தின் பிரதியைத்தமக்குஅனுப்புமாறும் கல்வி இராஜாங்க அமைச்சர் திருமதி இராஜமனோகரி புலேந்திரன் இலங்கை தமிழர் ஆசிரியர் சங்கத்திற்கு கடிதம் ஒன்றின் மூலம் கேட்டுள்ளார்

இதே சமயம் அதிபர் தரம்

—08 ஆம் பக்கம் பார்க்க

## பல்துறை சேவை

## தமிழர், முஸ்லிம் உட்பட 47 பேருக்கு கௌரவம்

பல் துறைகளில் பணியாற்றியவர்களின் சேவைகளைக் கௌரவிக்கும் முகமாக 47 இலங்கையர்களுக்குகௌரவப் பட்டங்கள் அளிக்கப்பட்டன.

இதில் பதினொரு தமிழ் முஸ்லிம் பிரமுகர்களும் அடங்குவார்கள்,

முன்னாள் கல்வி அமைச்சரும் சுகாதார அமைச்சருமான கலாநிதி அல்ஹாஜ் பதியுதீன் மஹமுத், தேசிய அபிவிருத்தி வங்கித் தலைவர்

— 08ஆம் பக்கம் பார்க்க

## யாழ்ப்பாண முருங்கைக்காய்க்கு முல்லைத்தீவில் நல்ல கிராக்கி

மூல்லைத்தீவில் முருங்கைக்காய் ஒரு கிலோ முப்பத்தைந்து ரூபா விலை போகின்றது.

மேற்படி முருங்கைக்காய் விலையினைக் கேள்வியுற்ற வர்த்தகர்கள் பெருமளவில் முல்லைத்தீவு மாவட்டத்திற்கு முருங்கைக்காய் ஏற்றுமதி செய்வதில் அதிக நாட்டம் காட்டி வருகிறார்கள். (39)

## பயிலுநர் ஆசிரியர் கூட்டம் இந்துமகளிர் கல்லூரியில்

யாழ் மாவட்ட சகல உதவி அரசாங்க அதிபர் பிரிவுகளுக்கும் உட்பட்ட பயிலுநர் ஆசிரியர் பிரதிநிதிகளுக்கான பொதுக்கூட்டம் எதிர்வரும் 27ம் திகதி யாழ் இந்து மகளிர் கல்லூரியில் காலை 9-30 மணியளவில் நடைபெறவுள்ளது.

யாழ் மாவட்ட சகல உதவி அரசாங்க அதிபர் பிரிவுகளையும் சேர்ந்த ஒவ்வொரு பிரிவிலும் இருந்து பயிலுநர் ஆசி

—08 ஆம் பக்கம் பார்க்க

## இன்று நாள் எப்படி?

மேடம்: மனக்கவலை, பொருள் நஷ்டம், வாகன மாற்றம், புதுத் தொழில், பெரியோராசி, தேடியவர் வருகை.

இடபம்: வாகன நஷ்டம், திருடர் பயம், தேடியவர் வருகை, வாக்கு கலகம், பெரியோராசி.

மிதுனம்: புகழ் தேடி வரும், வாகன சுகம், வணிகர்கள் கடற் தொழில் இயந்திர தொழில் செய்வோர் இலாபம்.

கடகம்: வாக்குப் பலிதம், வணிகர்கள் இலாபம், பணவரவு, சுகஜீவியம், இளைய சகோதரவழியுதவி.

சிங்கம்: பிதாவழி உதவி, இராஜமரியாதை, பணப்புழக்கம், புதுத்தொழில், வணிகர்கள் இலாபம்.

கன்னி: எண்ணியது நடக்கும், கலைஞர்கள் கௌரவிக்கப்படல், பிரிந்தவர் ஒன்று சேருவர்.

துலாம்: விவாக நிச்சயம், உயர் பதவி, உத்தமர் உறவு, வாகன இலாபம், இளைய சகோதரவழியுதவி.

விருச்சிகம்: உடல் ரோகம், மாமன் வழியுதவி, பணச் செலவு, வாக்கு வசீகரம், வணிகர்கள் இலாபம்.

தனுசு: சுகஜீவியம், புத்திர மகிழ்ச்சி, புண்ணிய வழிபாடு, வாகன இலாபம், வணிகர்கள் இலாபம்.

மகரம்: தேடியவர் வருகை, சுகஜீவியம், பணவரவு, மாமன் வழியுதவி, புதுமனைச் சேர்க்கை.

கும்பம்: உயர்பதவி, புகழ் தேடிவரும், கலைஞர்கள் கௌரவிக்கப்படல், பிரிந்தவர் ஒன்று சேருவர்.

மீனம்: பணவரவு, வாகன சுகம், வணிகர்கள் கடற் தொழில் இயந்திரத் தொழில் மூலம் இலாபம்.

யாழ். சோதிடர்

ச. அரியநாயகம்

## 'அப்பே ஆண்டுவ' தர்பார் தனிச் சிங்களக் கடிதம்

(சங்கானை)

அரசாங்க மருந்துக்கலவையாளர்கள் தரம் மூன்றில் உள்ளவர்களுக்கான வினைத்திறமை காண் தகுதிப் பரீட்சை கொழும்பு களுபோவில வைத்தியசாலையில் இம்மாதம் 31—ம் திகதியன்று நடைபெறவுள்ளது.

இதற்கு விண்ணப்பித்த யாழ் மாவட்டத்தைச் சேர்ந்த மருந்துக்கலவையாளர்களுக்கு தனிச் சிங்கள மொழியில் இப் பரீட்சைக்கான விபரங்களும், அனுமதி அட்டையும் கொழும்பிலுள்ள சுகாதாரத் திணைக்களப் பணிப்பாளர் நாயகத்தின் அலுவலகத்தினால் இவ்வாரம் அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. )13

## மண்டைதீவு மேற்கில் வீடமைப்பு விண்ணப்பம்

(மண்டைதீவு)

மண்டைதீவு மேற்கு கிராம சேவையாளர் பிரிவிற்கான வீடமைப்புத் திட்டக் கடன் வ்ண்ணப்பங்கள் கிராமசேவையாளர் திரு. எஸ். சுர்தரலிங்கத்தால் தற்போது வழ்ங்கப்பட்டு வருகின்றன

இவ் விண்ணப்பங்கள் வேலணை உதவி அரசாங்க அதிபர் பணிமனையினாலேயே வழங்கப்படுவதாக இருந்த போதிலும் அங்கு ஏற்பட்ட சில நெருக்கடிகளைத் தவிர்க்கும் முகமாகவே இந்நடவடிக்கை மேற்கொள்ளப் படுவதாகத் தெரிவிக்கப் படுகிறது. (ப-12)


## அறிவித்தல்

சங்கானை Jupiter Sports Club வளர்ச்சி நிதிக்காக நடாத்தப்பட்ட அதிர்ஷ்டலாபச் சீட்டிழுப்பில் இது வரை உரிமை கோரப்படாத பரிசில்கள் 25. 5. 90க்கு பின் விற்பனை செய்யப்படும் என்பதை அறியத் தருகின்றோம்.

க. சத்தியலிங்கம்
செயலாளர்.
05152

## வெற்றிடங்கள்

### மொழிபெயர்ப்பாளர், தட்டெழுத்தாளர்

ஆங்கிலத்தில் உள்ள அரிய நூல்களைத் தமிழாக்கம் செய்ய மேலும் சில மொழிபெயர்ப்பாளரும் தமிழ்த் தட்டெழுத்தாளர்களும் தேவை. வயதெல்லை இல்லை. 27. 5. 1990 ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணிக்கும் 1 மணிக்கும் இடையில் தகுதிச் சான்றுகளுடன் நேரில் சமுகம்தரவும். திறமை, அனுபவத்துக்கேற்ப சம்பளம் நிர்ணயிக்கப்படும்.

தொடர்பு:

இல 6, மணிக்கூட்டு வீதி
யாழ்ப்பாணம்.
(மணிக்கூட்டுக் கோபுரத்துகண்மையில்)
05139


### வைத்திய நிபுணர்

## பற்றாக்குறையைப் போக்க அரசாங்கம் துரித முயற்சி

இலங்கையில் வைத்திய நிபுணர்கள் இல்லாக் குறையை நீக்குவதற்கு உதவுமாறு அரசாங்கம் வெளி நாட்டு தூதரகத்தினையும், வெளி நாடுகளிலுள்ள இலங்கையர்களையும் கேட்டுள்ளது.

வெளி நாடுகளில் இருக்கும் இலங்கையர்கள் நாட்டுக்குத் திரும்ப வேண்டும், அல்லது குறுகிய காலத்திற்கேனும் கடமையாற்ற வேண்டும் எனவும் கேட்கப்பட்டுள்ளார்கள்.

யு. என். டி. பி. திட்டத்தின்கீழ் வெளிநாடுகளிலுள்ளோர் எம் நாட்டிற்கு உதவ ஏற்பாடுகள் செய்வது பற்றி ஆலோசிக்கப்பட்டு வருகின்றது.

இதன் மூலம் யு.என்.டி.பி. வெளி நாட்டுச் செலாவணியால் வேதனம் அளிக்கும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இலங்கைக்கு தற்போது 64 வைத்திய நிபுணர்கள் அவசரமாக தேவைப்படுகின்றனர். அத்தோடு 10 சத்திர சிகிச்சை நிபுணர்களும், 20 அனெஸ்தெடிஸ்ட், 8 ஈ.என்.டி. சர்ஜன், 10 பதோலோஜிஸ்ட், 5 குழந்தை வைத்தியர், 17 றேடியோலோஜிஸ்ட், 1 நரம்பு சிகிச்சை நிபுணர் ஆகியோர்கள் தேவைப்படுவதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

## கூட்டுறவுச் சங்கங்கள் சட்டம் திருத்தப்படும்

எந்தக் கூட்டுறவுச் சங்கத்திலும் உள்ளூராட்சி மன்றங்களின் உறுப்பினர்கள், மாகாண சபைகளின் உறுப்பினர்கள், எம். பீக்கள் பதவி வகிப்பதைத் தடை செய்வதற்கெனக் கூட்டுறவுச் சங்கங்கள் சட்டத்தில் திருத்தம் கொண்டு வரப்படுமென்று உணவுக் கூட்டுறவு அமைச்சர் திரு. வீரசிங்க மல்லிமாராச்சி கூறினார்.

மாகாண சபை உறுப்பினர்கள், கொழும்பு முனிசிப்பல் சபை உறுப்பினர்கள் மத்தியில் உரையாற்றியபோதே அமைச்சர் மேற்கண்டவாறு கூறினார்.

கூட்டுறவு இயக்கத்தை மாற்றியமைக்கும்பொருட்டே இச் சட்டத்தில் திருத்தம் கொண்டுவரப்படுகிறது என்றும் கூட்டுறவு இயக்கம் திருத்தி அமைக்கப்பட்ட பின்னர் ஒவ்வோர் உதவி அரசாங்க அதிபர் பிரிவிலும் கூட்டுறவுச் சங்கம் இருக்குமென்றும் அமைச்சர் மேலும் சொன்னார்.

## வடமராட்சி கிழக்கு சிரமதானத்தில் மாத்தயா

வடமராட்சி கிழக்குப் பகுதியில் உள்ள கோவில் சந்தியில் இருந்து சுண்டிக்குளம் வரையிலான பிரதேசத்தை இண்ணக்கும் வீதியினை உருவாக்கும் பணியை யாழ். பல்கலைகழகமறுமலர்ச்சிக்கழகத்தினால் மேற்கொள்ளப்பட்டது.

நீண்ட காலமாக மேற்படி பகுதிகளை இணைக்கும் வீதி இன்மையால் அப்பகுதிகளில் வாழும் மக்கள் கால்நடையாகவே சென்று வந்தனர். வாகனங்களில் செல்ல வேண்டியதாயின் மணல் பகுதிகளூடாக உழவு இயந்திரங்கள் மூலமே செல்லக் கூடியதாக இருந்தது.

இவ்வீதி அமைப்பு வேலைகளை விடுதலைப் புலிகள் மக்கள் முன்னனித் தலைவர் திரு. கோ. மகேந்திரராஜ (மாத்தயா) நேரில் சென்று பார்வையிட்டு வேலைத் திட்டத்தை மேற் கொள்பவர்களுடனும் கலந்துரையாடினார்.

## புதிய நிர்வாகிகள்

சுன்னாகத்தில் வி. பு. மக்கள் முன்னணிச் சுன்னாகப் பொறுப்பாளர் திரு. சிவா தலைமையில் வர்த்தகர் சங்க நிர்வாக சபைத் தெரிவுக் கூட்டம் அண்மையில் திருஞானசம்பந்தர் வித்தியாசாலையில் நடைபெற்றபோது பின்வருவோர் தெரிவு செய்யப் பட்டனர்.

தலைவர்:- பா. அரிச்சந்திரா, உப தலைவர்: சி. முத்துக்குமாரு, செயலாளர்:- சோ. அருணகிரிநாதன், உப செயலாளர்:- சி.செல்வசீலன், தனாதிகாரி:- தி. அரசரத்தினம், கணக்காய்வாளர்:- க. பன்னீர்கரன் ஆகியோருடன் 24 பேர் பொதுச்சபைக்குத் தெரிவு செய்யப்பட்டனர். (ப-2)

## கொழும்புத்துறையில் சமயதீட்சை

(நாயன்மார்கட்டு)

கொழும்புத்துறை இந்து இளைஞர் மன்றம் அடுத்த மாதம் நூறுபேருக்கு சமய தீட்சை அளிப்பதற்கு ஏற்பாடு செய்து வருகிறது. இலங்கை இந்து இளைஞர் பேரவையின் உதவியுடன் இச்சமய தீட்சை கொழும்புத்துறை மேற்கு வதிரி பீட விநாயகர் ஆலயத்தில் நடைபெறவிருக்கின்றது —33

## கரடிப்போக்குச் சந்தியருகில் மரணப்பொறிப் பாலம்

கிளிநொச்சி கணேசபுரப் பகுதியில் உருத்திரபுர வீதியையும் கணேசபுரத்தையும் இணைக்கும் பாலம் மிகவும் பழுதடைந்த நிலையில்காட்சியளிக்கின்றது.

1986 ம் ஆண்டு பழுதடைந்து இருந்தபோது மக்கள் போவதற்காகப் பலகை வைத்து ஆபத்துடன் கடந்து சென்றனர்.

சென்திரேசா மகாவித்தியாலய மாணவிகள், சிறுகுழந்தைகள் இப்பாலத்தைக்கடக்கும்போது பீதியுடன் கடக்கின்றார்கள்.

கணேசபுர முன்னேற்றச்சங்கம் இதையிட்டு எவ்விதநடவடிக்கையும் எடுக்கவில்லை. மரணப் பொறிபோல் காட்சியளிக்கும் இப்பாலத்தால் சைக்கிள் வண்டி. மோட்டார் வண்டிகள் போகும் போது உயிரைக் கையில் பிடித்த வண்ணம் செலல வேண்டியுள்ளது. (ப.6)

## சமுதாய வளர்ச்சிக்கு விளையாட்டும் உதவுகின்றது

(மண்டைதீவு)

சமுதாய வளர்ச்சிக்குக் கல்வி மட்டுமன்றி விளையாட்டும் இன்றியமையாததாகும், நோய்யற்றவர்களாக நாம் வாழ்வதற்கு விளையாட்டு சிறந்ததாகவும் காணப்படுகிறது

இவ்வாறு மண்டதீவு வான்மதி விளையாட்டுக்கழகத்தின் வருடாந்தப் பொதுக் கூட்டத்தில் கலந்து கொண்டு உரையாற்றிய மண்டதீவு மேற்கு கிராமசேவையாளர் திரு. எஸ். சுந்தரலிங்கம் குறிப்பிட்டார்.

கழகத் தலைவர் திரு. த. சிவபரஞ்சோதி. ஜே. பி. தலைமையில் நடந்த இக் கூட்டத்தில் அவர் தொடர்ந்து பேசுகையில் ஒற்றுமை, ஒருமைப்பாடு, விட்டுக் கொடுக்கும் தன்மை போன்றவற்றை ஏட்டுக் கல்வியன்றி மைதான விளையாட்டுக்களிலேயே நாம் கற்றுக் கொள்ள முடியும், வெற்றியையும் தோல்வியையும் பொறுமையோடு ஏற்றுக் கொள்ளும் பக்குவ நிலையை நாம் அடைய வேண்டும் என்றார். ப—12


### சிறு விளம்பரம்

#### பரீட்சை

ஆண்டு ஐந்து புலமைப் பரிசில் மாதிரிப்பரீட்சை ஒவ்வொரு சனிக்கிழமையும் பிற்பகல் 3.00 – 6.00 வரை நடைபெறும் வெளி மாணவரும் பங்குபற்றலாம். உடன் தொடர்பு கொள்க. எலைற் இன்ஸ்ரிரியூட், (வண்ணை தபாலகம் முன்பாக) 99, மானிப்பாய் வீதி, யாழ்ப்பாணம். 05150


## இரத்தினக்கல் வர்த்தக வங்கி நிறுவ அரசு முடிவு

இரத்தினக்கல் வர்த்தக வங்கி ஒன்றை அரசாங்கம் நிறுவத் தீர்மானித்துள்ளது. இந்த வங்கி நிதி உதவியை அளிப்பதுடன், இரத்தினக் கற்களை வாங்கி விற்கும் அத்துடன் இரத்தினக் கற்களை ஏற்றுமதியும் செய்யும்.

இரத்தினக்கல் வர்த்தக வங்கியானது கெவுடா கற்களை உற்பத்தி செய்பவர்களுக்கு விசேட கடன் வசதிகளை அளிக்கும்.

இரத்தினக்கல் வர்த்தகத்திற்கு இதுபோன்ற வங்கி ஒன்று அவசியம் என அரசாங்கம் கருதுகின்றது.

இலங்கை இரத்தினக் கற்களை சர்வதேசச் சந்தையில் விற்பதற்குத் தனியான நிறுவனம் ஒன்று அவசியம் எனவும் அரசு உணர்ந்துள்ளது எனத் தெரிவிக்கப்படுகின்றது.

இரத்தினக்கல் கூட்டுத்தாபனம் வழமைபோல இயங்குகையில் இரத்தினக்கல் வர்த்தக வங்கி நிதி நிறுவனம் போல இயங்கும் எனவும்தகவல் வெளியாகியுள்ளது

# 6-வது திருத்தச்சட்டம் நிரந்தர பிரிவிற்கு வழி

ஆறாவது திருத்தச்சட்டமூலத்தை நீக்குவது தொடர்பான பிரேரணை பாராளுமன்றத்தில் கொண்டுவரப்படவுள்ளது.

ஈரோஸ் இயக்கத்தின் வெகுஜன அணியான ஈழவர் ஜனநாயக முன்னணி தனிநபர் பிரேரணையாக இதனைக் கொண்டுவரவுள்ளது.

இவ்வாரத்தில் இப்பிரேரணை கொண்டு வரப்படலாம் என எதிர்பார்க்கப்படுகிறது.

பிரிவினைக்கு எதிராக அன்று இச்சட்ட மூலத்தைக் கொண்டுவருவதற்கு முழு ஆதரவாக நின்றவர் தற்போதைய ஜனாதிபதி பிரேமதாஸ.

அன்று அப்போது அவர்சார்ந்த கட்சியிடம் மூன்றில் இரண்டு பெரும்பான்மை பலம் இருந்தது.

இன்று அது இல்லாத நிலையில் அவர் என்ன செய்யப்போகிறார் என்பதே கேள்விக் குறி.

உண்மையில் நாட்டில் சமாதானம் நிரந்தரமாக ஏற்பட வேண்டும் என்பது அவரது விருப்பமா?

அல்லது தற்போதைய தற்காலிக சுமுக நிலையை இழுத்தடிக்க விருப்பமா? என்ற கேள்வி அரசியல் அவதானிகளிடத்தில் எழுந்துள்ளது.

ஜனாதிபதி இந்நிலையை இழுத்தடிக்க முடியாதவாறு சட்டத்திருத்தப் பிரேரணை கொண்டு வரப்படவுள்ளது.

தமிழ் இயக்கங்களும் அவை சார்ந்த கட்சிகளும் 6-வது திருத்தச்சட்ட மூலத்தை எதிர்த்து வந்துள்ளன.

ஆனால், வாக்கெடுப்பின்போது அவை என்ன செய்யும் என எதிர்பார்க்க முடியாதுள்ளது.

அரசியல், இயக்க கோபதாபங்களை அவர்கள் இந்த வாக்கெடுப்பில் காட்டக் கூடிய சூழ்நிலையும் உள்ளது.

இடதுசாரிக்கட்சிகள் தாமும் 6—வது திருத்தச் சட்ட மூலத்தை எதிர்பார்ப்பதாகக் கூறி வந்தாலும், நவசமசமாஜக் கட்சி மட்டுமே பகிரங்கமாக இதனை அறிவித்துள்ளது.

முஸ்லிம் காங்கிரஸ் ஆரம்பத்தில் 6—வது திருத்தச்சட்ட மூலத்தை வரவேற்றாலும், கடைசியில் புலிகளுடன் இது குறித்துப் பேசித் தீர்மானிக்கவுள்ளதாகத் தெரிவித்துள்ளது.

இதில் தமிழ் மக்கள் மீது அவர்கள் கொண்டுள்ள அக்கறையை விட கட்சியின் அரசியல் ஆதாயத்தையே அதிகம் விரும்புவதாகத் தெரிகிறது.

வாக்கெடுப்பின்போது அவர்கள் தமிழ்—முஸ்லிம் மக்களின் நலனிற்கே அதிகம் முக்கியத்துவம் கொடுக்க வேண்டும் எனத் தமிழ் மக்கள் விரும்புகின்றனர்.

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி இன்னமும் தனது நிலைப்பாட்டை வெளிப்படையாக அறிவிக்காவிடினும், அது பிரேரணையை எதிர்க்கும் என்றே நம்பப்படுகின்றது.

தமிழ் மக்கள் சுயநிர்ணய உரிமையுடையவர்கள் இவர்களுக்குப் பிரிந்துபோகவும் உரிமை உண்டு.

எனவே, பிரிவினைக்கு எதிரான சட்டமூலம் உடன் நீக்கப்படவேண்டும் என்று கேட்பதில் எதுவித தவறும் இல்லை.

இதனை சகல எதிர்க்கட்சிகளும் உணர்ந்து கொள்ள வேண்டும்.

இனப்பிரச்சினைக்கு ஒரு சாதகமான தீர்வை இப்பிரேரணை கொண்டு வரும் என்றால் அதனை எதிர்க்கட்சிகள் அவசியம் வரவேற்க வேண்டும்.

அதைவிடுத்து எதிர்க்கட்சிகள் என்றால் எல்லாவற்றையும் எதிர்க்கும் கட்சிகள் என்ற அர்த்தத்தில் செயல்படுவதைத் தவிர்க்க வேண்டும்.

பிரிவினைக்கு எதிரான இச்சட்ட மூலத்தை நீக்குவதால் இலங்கை பிரிந்து விடும் என்று சிங்கள, பௌத்த மக்கள் எண்ணுவது தவறாகும்.

பிரிவினைக்கு எதிரான இச் சட்டம் நீக்கப்படாவிட்டால், சில வேளை பின்னால் வரும் நிரந்தரப் பிரிவினைகக்கு இதுவே அத்திவாரமாக, ஆரம்பப் புள்ளியாக அமைத்துவிடும் என்பதை அவர்களுக்கு எச்சரிக்கையுடன் தெரிவித்துக் கொள்கின்றோம்.

# இதயநாதம்

புதன்கிழமை 23 - 05 - 1990

## நலவாக்கு

பெற்றோர்கள் மனிதனுக்குக் கண்கண்ட தெய்வம். அவர்கள் உயிரோடிருக்கும் வரையில் ஒவ்வொருவரும் தன்னாலான அளவு அவர்களுக்குச் சேவை செய்ய வேண்டும்.

—சுவாமி ராமகிருஷ்ணர்

[illegible] யாழ்ப்பாணம்

உலகிலே முதன் முதலாக தமிழில் வெளிவந்த நகைச்சுவை இதழ் சிரித்திரன். 1965ஆம் ஆண்டு செப்ரெம்பர் மாதம் 15ஆந் திகதி சிரித்திரன் பயணத்தை ஆரம்பித்தான்.

நகைச்சுவை யூடாகவும் உயரிய கருத்துக்களைச் சொல்ல முடியும் என்பதை சிரித்திரன் நிருபித்துக் காட்டினான். சிரித்திரனில் வெளிவந்த நகைச்சுவைகள் குறிப்பிட்ட ஒரு காலகட்டத்திற்கு மட்டும் பொருந்தும் என்று சிலர்கூறலாம் ஆனால் பெரும்பாலான நகைச்சுவைகள் எக்காலத்திற்கும் பொருந்துவன வாகவே அமைந்துள்ளன.

சிரித்திரனில் வெளிவந்த சில நகைச்சுவைகளை இப்போது மீண்டும் ஒரு முறை நினைவுபடுத்திப் பார்ப்போம்.

மினி பஸ்ஸில் பிரயாணம் செய்வதென்றால் இப்போது முதுகுவலி, இடுப்புவலி, அதைவிட வேறு வலிகள்கூட ஏற்பட்டு விடுகின்றன. சிறிய மினி பஸ்களில் ஆடு, மாடுகளைப் போல பிரயாணிகளை ஏற்றுகிறார்கள் நிமிர்ந்து நிற்க முடியாது.

இதைப் பார்தத சிரித்திரன் இப்படி ஒரு நகைச்சுவையை வெளியிட்டான்.

மேடைப் பேச்சாளர்:— தமிழன் என்று சொல்லடா தலை நிமிர்ந்து நில்லடா?

ஒருவர்:— மினி பஸ்ஸில் பயணம் செய்யும் எம்மைப் பார்த்தா இப்படிக் கூறுகிறார்.



சொட்டுது சொட்டுது பாரு இங்கே!

சொட்டுது கொட்டுது பாரு அங்கே!

யாழ்ப்பாண வீதிகளில் 1983 இற்குப் பின் அவதானமாகத்தான் செல்ல வேண்டும். குண்டு குழி இல்லாத வீதிகளைக் காண்பது அரிது. இதைப் பார்த்த சிரித்திரன்

## சிரிக்கவும்

ஆசிரியர்:— வாழ்க்கை என்பது மேடு பள்ளம் நிறைந்தது.

மாணவன்:— யாழ்ப்பாண வீதி மாதிரியா சார்.

என்ற நகைச்சுவையை வெளிட்டார் இந்த நகைச் சுவையில்தான் எத்தனை அர்த்தங்கள்.

நம்மவர்கள் பஸ்ஸிற்காக காத்து நின்றால் என்ன புகையிரதத்திற்காக காத்து நின்றால் என்ன சீற் பிடிப்பதில் நான் முதல் நீ முதல் எனப் போட்டி போடுவதில் நம்மவர்களுக்கு நிகர் நம்மவர்களே இதனைச் சிரித்திரன் அழகாகச் சொல்கிறான்.

ஆசிரியர்:— பாடசாலை விளையாட்டுப் போட்டியில் சங்கீதக் கதிரைப் போட்டியும் உண்டு. நீ எப்படி பயிற்சி செய்து வருகிறாய்?

மாணவன்:— ஜன நெரிசலில் உள்ள பஸ்ஸில் தினமும் ஏறுவேன் இருந்து பயணம் செய்த யாராவது இறங்கினால் மற்றவர்களைத் தள்ளிவிட்டுகெதி கெதியாக இருந்து விடுவேன்.

கறுப்பு மார்க்கட் வியாபாரிகளின் வாயில் இருந்து என்றுமே உண்மை வராது. அவர்களுக்கு உண்மை பேசுபவர்களைப் பார்த்தால் பிழைக்கத் தெரியாதவன் என்ற நினைப்புத்தான் வரும். இதனைச் சிரித்திரன் எப்படி நயம்படச் சொல்கிறான் பாருங்கள்.

கறுப்பு மார்க்கட் வியாபாரி:— அண்மையில் நான் ஒரு நகைச்சுவை நாடகம் பார்த்தேன்.

கடத்தல் மன்னன்:— என்ன நாடகம்?

கறுப்பு மார்க்கட் வியாபாரி:— அரிச்சந்திரன் நாடகம்.

இன்று நம்மவர் வெளிநாட்டு மோகத்தால் ஈர்க்கப் பட்டுள்ளார்கள். வெளிநாட்டு மாப்பிள்ளைக்கு இருக்கும் மதிப்பு வேறு எந்த உள்ளூர் மாப்பிள்ளைகளுக்கும் இல்லை எம்மவர்களின் மன நிலையை சிரித்திரன் தெளிவாகப் படம் பிடித்துக் காட்டுகிறான்.

மைனர்:— என் காதலுக்கு என்ன பதில் சொல்றீங்க.

பெண்:— அந்நிய நாட்டில் போய் ஐந்து லட்சம் உழைத்து வாங்க .. பதில் சொல்கிறேன்.

சில கடைக்காரர்கள் தமக்குப் போட்டியாக ஒரு கடை இருக்கிறது என்றால் பொருட்களின் விலைகளைக் குறைத்து விடுவார்கள். என்ன இந்தக் கடையில் மட்டும் பொருட்கள் மலிவாக இருக்கின்றன என்ற சந்தேகம் எழும். இந்த சந்தேகத்தை சிரித்திரன் போக்குகிறான்.

வாடிக்கையாளர்:— நீங்கள் கடை வியாபாரத்தை விட்டு விட்டு நாட்டிய ஆசிரியராகப் போனாலென்ன?

கடைக்காரர்:— ஏன்?

வாடிக்கையாளர்:— தராசை தில்லானா ஆட வைக்கிறீங்களே.

## சிந்திக்கவும்

வாசகர்களே சில கடைகளில் பொருள்கள் ஏன் மலிவு என்று......

இந்திய சினிமா உலகம் எப்படிப் போகிறது ... இன்று தரமான படங்கள் வெளிவருகிறதா? எதற்கு முக்கியத்துவம்கொடுக்கிறார்கள் இன்று எதை வைத்துக்கொண்டு சினிமாஉலகத்தினர் பிழைத்து வருகிறார்கள் இதை எப்படி சிரித்திரன் சொல்கிறது பாருங்கள்.

சடை நாய்க் குட்டி:— அம்மா குளிருது.

தாய் நாய்:— ஆடையில்லா சினிமா நடிகைக்கு குளிரவில்லையாம் ... உனக்கா குளிருது .....

சிரித்திரன் நகைச்சுவை சிரிக்க மட்டும் வைக்கவில்லை சிந்திக்கவும் வைக்கிறது.

வெளிநாடு கணவன் செல்கின்றான் என்றால் மனைவிக்கு உள்ளூர விருப்பமில்லை. எப்படியோ வாழ்க்கையை கொண்டு நடத்த பணம் தேவை. இதற்காக அனுப்பி வைக்கிறாள். அவளுடைய மனம் என்ன சொல்கிறது என்பதை சிரித்திரன் இப்படிச் சொல்கிறார்.

கணவன்:— கண்மணி... நான் அந்நிய நாடு போய் வர விடை தந்தருள்வாயாக ....

மனைவி:— பிராண நாதா என்னை...என்னைஏதோ ஒரு இனம் புரியாத கவலை வாட்டுகிறதே... நீங்கள் அங்கு சென்று மாதவியின் மடியில் என்னை மறந்தால்

கணவன்:— !!!

## சிரித்திரன் அகராதி

கிரகம்: மனிதனைப் பந்தாடும் விண்வெளிப் பந்துகள்.

பேனா: மனிதனின் இரண்டாவது நா.

சந்தை: பேரம் பேசி நேரம் கொல்லும் கால இடுகாடு.

கண்ணீர்: திரவியமில்லாத போது மனிதனின் கண்களிலிருந்து வடியும் ஓர் திராவகம்.

வீதி: மனிதன் வாகனங்களுடன் கிளித்தட்டு விளையாடும் மைதானம்.

முகமூடி: திருட வெட்கப்படுவோர் முகத்தை மூடி அணியும்மூடி.

மூக்குப்பொடி: மனிதன் சுவாசிக்கும் ஒரு வகைத்தூள்

சவர்க்காரம்: மனிதன் துப்பரவில் அக்கறை கொண்டு கரையும் ஒரு புனிதப் பிறவி.

மீன்: தூங்கும் மனிதனுக்கு இரையாகும் தூங்காத ஜீவன்.

காகம்: வீதிச் சிலைகளின் உச்சி மீது அச்சமின்றி எச்சமிடும் பறவை.

சிரித்திரனுக்கு ஈழத்தில் மட்டுமல்ல இந்தியா, மலேசியா, சிங்கப்பூர் போன்ற நாடுகளிலும் வாசகர்கள் இருக்கின்றார்கள்.

தமிழ் கூறும் நல்லுலகில் தனக்கென்று ஓர் இடத்தைப் பிடித்துக் கொண்ட சிரித்திரன் 1987ஆம் ஆண்டு ஒக்டோபர் மாதம் முதலாம் திகதியுடன் தனது பயணத்தை

### வி.என்.எஸ்.உதயசந்திரன்

முடித்துக் கொண்டது.


18 வருடகாலம் தொடர்ந்து பயணம் செய்த சிரித்திரன் வாசகர்கள் மனதில் நீங்காத இடத்தைப் பிடித்துவிட்டான். சிரித்திரனுக்கு வரலாற்றில ஒரு தனி இடம் உண்டு என்பதை எவரும் மறந்துவிட முடியாது.

இப்படி நகைச் சுவைகளுக் கூடாகஉயரிய கருத்துக்களைச் சிரித்திரன் வெளியிட்டு வந்தது.

## சிரித்திரன்

ஆண் ஆடு:- அன்பே எனது காதலுக்கு என்ன முடிவு சொல்கிறாய்?

பெண் ஆடு:- அதெல்லாம் நீ தீபாவளிக்குப் பின் உயிரோடு இருந்தால் சொல்கிறேன்.



# பொடிச் செய்திகள்

## பொம்மை வெளியில் சத்துணவு விநியோகம்

பொம்மை வெளி குடும்பத் திட்டச் சங்கத்தினால் அண்மையில் அப்பகுதியில் போசாக்குக் குறைந்த பிள்ளைகள், தாய்மார்களுக்குச் சத்துணவு வழங்கும் வைபவம் ஒன்று நடாத்தப்பட்டது.

கடந்த ஒரு வருடமாக இப்பகுதி மக்களின் தாய் சேய் நலன் கருதி இவ்வமைப்பு முதலுதவி, வைத்திய ஆலோசனைகள், கிளினிக்குகள், சுகாதாதாரக் கருத்தரங்கு போன்றவற்றையும் குடும்பத் திட்டச் சங்க தொண்டர்கள் மூலம் மேற்கொண்டு வருகின்றது.

பொம்மை வெளி குடும்பத் திட்டச் சங்கத் செயற்குழுத் தலைவர் ஜனாப் எம். எஸ். ஜினூஸ் (முஸ்லிம் வட்டார கிராம சேவை அலுவலர்) அவர்களினால் ஏற்பாடு செய்யப்பட்ட இவ்விழாவில் பிரதம அதிதியாக இலங்கை குடும்பத் திட்டச் சங்கப் பொதுச் செயலாளர் எஸ். சேதுகாவலர் கவந்துகொண்டார்-

## மல்லாகத்தில் மாணவர் மன்றம்

(உடுவில்)

பல வருட காலத்துற்குப் பின்னர் மல்லாகம் மகாவித்தியாலயத்கில் உயர்தர மாணவர் மன்றம் அமைக்கப்பட்டுல்ளது.

தெரிவுசெய்யப்பட்ட நிர்வாகசபை விபரம் வருமாறு:- தலைவர்:- ம. மதனன். உப தலைவர்:- இ. கலாராணி, செயலாளர்:- த. ஜெயகாந்தன், உப-செயலாளர் சு. ஸ்ரீகுமரன்: பொருளாளர்:- ஞா, அருள்மொழி, பத்திராதிபர்:- கு. சற்குணதேவி எட்டு நிர்வாக சபை உறுப்பினர்களும் தெரிவுசெய்யப்யட்டனர்.

(ப-2)

## ஆசனப் பதிவு வழங்கப்படுமா?

(உடுவில்)

இரவு மெயில் ரயிலில் இரண்டாம், மூன்றாம் வகுப்புகளுக்கான உறங்கலிருக்கைகள் சுன்னாகம் புகையிரத நிலையத்திற்கு ஒதுக்கப்படாதிருப்பதால் பொதுமக்கள் யாழ்ப்பாண ரயில் நிலையம் வரை சென்று காத்து நிற்க வேண்டியுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

சில வேளைகளில் அங்கும் இடம் கிடைப்பதில்லையாம். இதனைப் புகையிரத இலாகா பரிசீலனை செய்து சுன்னாகம் புகையிரத நிலையத்திற்குச் சில ஆசனங்களை ஒதுக்கினால் பொதுமக்களின் சிரமத்தைத் தவிர்க்கலாம் எனவும் தெரிவிக்கப்படுகிறது.

(ப-2)

## மானிப்பாய் தபாலகம் இடம்மாறும்

(மானிப்பாய்)

மானிப்பாய் தபாற்கந்தோர் தற்போதுள்ள இடத்திலிருந்து விரைவில் வேறோர் இடத்திற்கு மாற்றப்படவுள்ளது.

தற்போது தபால்நிலையம் இயங்கும் கட்டிடம் மிகவசதி குறைந்ததாக உள்ளதாலும் இத்தனியார் கட்டிடத்தை வாடகைக்கு பெற வேறோவர் முயற்சிப்பதாலும் மானிப்பாய் சந்தைக் கட்டிடத்திற்கருகில் இதற்கெனக் கட்டிடமொன்றை பெற முயற்சிக்கப்படுகின்றது. (30)

## தவில் மேதை பழனிமலைக்கு பாராட்டு விழா

ஈழத் தமிழினத்தின் கலைச் சிறப்பை இமயம் வரை உயர்த்திவிட்ட தவில் மேதை கே. பழனிமலைக்கு கைதடியில் பாராட்டு விழா எடுக்கப்படுகிறது, யூன் மாதம் 23ஆம் திகதி நடைபெறும் இப்பாராட்டு விழாலில் சர்வ மத பீடாதிபதிகள், பல்கலைக் கழக பேராசிரியர்கள், ஈழத்துக் கலைஞர்கள் வாழ்த்துரைகள் வழங்கவிருகின்றனர், அன்றைய தினம் அவருடன் சேர்ந்து இந்திய—இலங்கை புகழ் நாதஸ்வர தவில் விற்பன்னர்கள் சேர்ந்து கான இசை மழை பொழியவிருக்கிறார்கள். (ப-5)

## தெல்லிப்பழை சாதனை

(சித்தன்கேணி)

உடுவில் மகளிர் கல்லூரியின் தொடர் கல்வி நிறுவனத்தில் நடாத்தப்பெற்ற ஆங்கிலப் பேச்சுக்கலை வன்மையில் தெல்லிப்பழை பலநோக்குக் கூட்டுறவுச சங்கத்தின் கல்விப் பிரிவில் ஆங்கிலப் பேச்சுப் பயிலும் எண்பது மாணவ மாணவிகள் கலந்து கொண்டனர்.

இவர்களில் தொடக்க நிலையில் 19 பேர் அதிவிசேட சித்தியும் 22 பேர் விசேட சித்தியும் 15 பேர் சாதாரண சித்தியும் பெற்றுக்கொண்டனர். ஆரம்ப நிலையில் 2 பேர் அதிவிசேட சித்தியும் 3 பேர் விசேட சித்தியும் பெற்றனர். பிரிவு ஒன்றில் 4 பேர் அதிவிசேட சித்தியும் 2 பேர் விசேட சிந்தியும் பெற்றுச் சாதனை நிலைநாட்டியுள்ளனர்.

## சலுகை நீடிப்பு

யாழ். மக்கள் வங்கியில் அடகு வைத்திருக்கும் நகைகளுக்கான வட்டிச் சலுகை இவ்வருடம் யூன் 30ஆம் திகதி வரை நீடிக்கப்படும்.

யாழ், மக்கள் வங்கி பொது முகாமையாளர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அடகு நகைகளை மீளக் கையளிக்கும் நடவடிக்கைகள் மூன்று கட்டங்களாக செயற்படுத்தப்பட்டன.

எனினும் 2ஆயிரம் அடகு நகைகள் மீட்கப்படாத நிலையில் இருக்கின்றன. இவற்றின் பெறுமதி 16 கோடி ருபாவாகும்.

## தென்மராட்சியிலும் விற்பனை

தியாகத் தாய் அன்னை பூபதியின் தியாக கீதங்கள் ஒலிப் பதிவு நாடாக்கள் தமிழீழ விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணியின் தென்மராட்சிப் பிரதேச காரியாலயத்தில் விற்பனை செய்யப்படுகின்றன.

மட்டக்களப்பு பாடுமீன் கலை மன்றத்தினால் வெளியிடப்பட்ட இந்த ஒலிப்பதிவு நாடா ஒன்றின் விலை 70 ரூபாவாகும். (ப. 5)

## ஆசிரியர் பயிற்சி

வடக்கு, கிழக்கு மாகாணங்களில் சுமார் 10 ஆயிரம் ஆசிரியர்களுக்கு பயிற்சி அளிக்க வேண்டியுள்ளது. இவர்களுக்கு வடக்கு,கிழக்கு மாகாணங்களிலுள்ள ஆறு ஆசிரியர் பயிற்க்சிகலாசாலைகள் மூலம் பயிற்சி அளிக்கப்படவுள்ளது. இவ்வாறு துணைக் கல்வி அமைச்சர் திருமதி இராஜமனோகரி புலேந்திரன் தெரிவித்தார்.

## பணிப்பாளர் வேணவா

# தமிழ் மொழியும் சர்வதேச பெருமை பெறுதல் வேண்டும்

ஆங்கில மொழியைப் போல் தமிழ் மொழியையும் சர்வதேச நிலைக்கு உயர்த்துவதற்கான நடவடிக்கைகளைத் தமிழ் மக்கள் மேற்கொள்ள வேண்டும் தமிழ் மக்கள் தமிழை வளர்ப்பதற்குத் தமிழ்ப் பணியாற்ற வேண்டும் பாடசாலைகள் தோறும் தமிழ் தினவிழாக்கள் நடாத்தப்பட வேண்டும்.

மேற்கண்டவாறு அல்வாய் சின்னத்தம்பி வித்தியாலயத்தில் நடைபெற்ற தமிழ்தின விழாவிலே பிரதம விருந்தினராகக் கலந்து கொண்ட கல்வி இராஜாங்க அமைச்சின் இணைச் செயலாளரும், கல்வி அமைச்சின் தமிழ் மொழி அமுலாக்கல் கல்விப் பணிப்பாளருமான திரு. வெற்றிவேலு சபாநாயகம் குறிப்பிட்டார்.

இத் தமிழ்தின விழாவிற்கு பாடசாலை அதிபர் திரு எஸ். செல்வராஜா தலைமைதாங்கினார்

தொடர்ந்து உரையாற்றிய திரு. சபாநாயகம் பேசுகையில் ஏனைய மொழிகளை விட தமிழ் மொழிக்குத் தனிப் பெருஞ்சிறப்புண்டு. தமிழை வளர்த்து அதன் தனிப் பெருஞ்சிறப்பைப் பேணுவதில் இன்றைய மாணவர்களுக்குப் பெரும்பங்குண்டு தமிழ் தினவிழாக்களை நடாத்திவிட்டால் மட்டும்போதாது தமிழ்ப் பணிகளையும் மேற்கொள்ள வேண்டியது எமது தலையாய கடமையாகும் ''என்றார்,

வடமராட்சி கோட்ட உதவிக்கல்விப் பணிப்பாளர் திரு. பீ.வீரபத்திரன் பருத்தித்துறை கொத்தணி அதிபர் திரு. பீ.பாலசிங்கம், ஆசிரியர் திரு.கோபால சுப்பிரமணியம் ஆகியோரும் உரையாற்றினர். கலை நிகழ்ச்சிகளும் இடம் பெற்றன (15)

## சிக்கன கடன் வழங்கு கூட்டுறவுச் சங்க சமாச புதிய நிர்வாகிகள்

யாழ் மாவட்டச் சிக்கனக் கடன் வழங்கு கூட்டுறவுச் சங்கங்களின் சமாசத்தின் வருடாந்தப் பொதுக் கூட்டம் அண்மையில் யாழ் வைத்தீஸ்வரா வித்தியாலயத்தில் நடைபெற்றது. சமாசத் தலைவர் திரு. எஸ். ஞானப்பிரகாசம் அவர்கள் தலைமை தாங்கினார். கூட்டுறவு ஆக்க உதவி ஆணையாளர் திரு. நித்தியராஜ் அவர்களும் சமூகமளித்திருந்தார். உதவி அரசாங்க அதிபர் பிரிவு ரீதியாகப் புதிய நிருவாக சபை உறுப்பினர்களாகப் பின்வருவோர் தெரிவு செய்யப் பட்டனர்.

திரு. நா. ம. எட்வேட் நெடுந்தீவு, திரு. த. சீவரத்தினம் சண்டிலிப்பாய், திரு. க. மகாதேவன் உடுவில், திரு செ. பத்திநாதர் தெல்லிப்பழை, திரு. ச. க. ராசரத்தினம் நல்லூர், திரு. ஞா. ம. ந. மகாராஜா யாழ்ப்பாணம், செல்வி. அ. திருஞானசோதி கோப்பாய், செல்வி. சு. கலாரஞ்சினி சாவகச்சேரி, திரு. பொ. சத்தியமூர்த்தி கரவெட்டி, திரு. லே. மார்க்கண்டேய பிள்ளை பருத்தித்துறை, திரு. பொ. சிவராஜா வடமராட்சி கிழக்கு, செல்வி. வி. ஜெகதீஸ்வரி சங்கானை, திரு. ஏ. திருநாவுக்கரசு வேலணை, திரு. கே.ஆர். சிவலிங்கம் ஊர்காவற்றுறை, திரு. ச.முருகநேசன் மாவட்ட ரீதியான பொது உறுப்பினர்.

இவர்களுள் சமாசத் தலைவராகத் திரு. ச. முருகநேசன் அவர்களும் உப தலைவராகத் திரு. க. மகாதேவன் அவர்களும் தெரிவு செய்யப்பட்டனர்.

## ஜனசக்தி சனசமூக நிலைய 42-வது ஆண்டு நிறைவு விழா

''ஜனசக்தி சனசமூக நிலையத்தின்'' 42வது ஆண்டு நிறைவுவிழாவானது எதிர் வரும் 25,26,27ம் திகதிகளில் நல்லூர்,அரசடி வீதியிலுள்ள நிலைய மைதானத்தில் நடைபெறவுள்ளது.

25ம் திகதி காலை 6.30 மணியளவில் 25 மைல் சைக்கிள் ஓட்டப்போட்டியும், 26ம் திகதி காலை 6 30 மணியளவில் 5 மைல் மரதன் ஓட்டமும் நடைபெற்று, 27ம் திகதி திரு.இரவீந்திரராயூ(நிலையத் தலைவர்) தலைமையில் நடைபெறவுள்ள ''பரிசளிப்பும் நாடகவிழாவும்'' நிகழ்ச்சியில் திரு. பொ. பாலசிங்கம்(யாழ்/மாநகரசபை ஆணையாளர்) பிரதம விருந்தினராகவும், திரு. அ. வேலுப்பிள்ளை (கிராம சேவையாளர்) அவர்கள் பரிசில்களையும் வழங்குவார். கலைநிகழ்ச்சிகளும் இடம்பெறும்.

## பிராந்திய சபை பொதுக்கூட்டம்

யாழ். உதவி அரச அதிபர் பிரிவு சிக்கன கடனுதவுக் கூட்டுறவுச் சங்கங்களின் பிராந்திய சபையின் வருடாந்தப் பொதுக் கூட்டம் யாழ். மாவட்ட சமாச உப தலைவி செல்வி தங்கம்மா நல்லதம்பி தலமையில் நடைபெற்றது.

பிராந்கிய சபையின் புதிய தலைவராகத் எஸ். கந்தசாமி தெரிவு செய்யப்பட்டார். கே. ஏப்பிரகாம் லிங்கன் உப தலைவராகத் தெரிவு செய்யப்பட்டார். (36)

## வட்டு.யாழ்ப்பாணக் கல்லூரி தொழில்நுட்பநிறுவனகலைவிழா

வட்டுச்கோட்டை, யாழ்ப்பாணக் கல்லூரித் தொழில் நுட்ப நிறுவன மாணவர் மன்றத்தின் வருடாந்தக் கலை விழா எதிர் வரும் 25ந் தேதி வெள்ளிக்கிழமை பகல் ஒன்பது மணியிலிருந்து 3 மணி வரை நடைபெறும்.

யாழ். பல்கலைக்கழக சிரேஷ்ட உதவிப் பதிவாளரும், பிரபல கவிஞருமான திரு. இ. முருகையன் அவர்களும் பாரியாரும் பிரதம விருந்தினராகக் கலந்துகொள்ளும் இவ்விழாவுக்கு மன்றத் தலைவர் திரு. எஸ். செல்வகுமார் தலைமை தாங்குவார்.

நிறுவனத்தின் ஏபெல்ஸ் அரங்கில் நடைபெறவுள்ள இவ்விழாவில், மாணவர்கள் தயாரித்தளிக்கும் நாடகங்கள், வில்லுப்பாட்டு, இசை நிகழ்ச்சிகள், கவிதா நிகழ்வு, நாட்டுக்கூத்து ஆகியவை இடம் பெறும்.

## வாத்தக நூல் வெளியீட்டு விழா

முகாமைக் கணக்கியற் கற்கை நிறுவனத்தின் ''வர்த்தக உலகம்'' சஞ்சிகை வெளியீட்டு விழா உதவிக் கல்விப் பணிப்பாளர் திரு. சி. தியாகராஜா தலைமையில் யாழ். மத்திய கல்லூரி மண்டபத்தில் இன்று முற்பகல் நடைபெறவுள்ளது.

## தென் பகுதியுடன் ஒப்பிடுகையில்

# வடபகுதியில் தேசிய சேமிப்பு வங்கிகளின் வளர்ச்சி அதிகம்

(உடுவில்)

தற்போது புதிதாக ஆரம்பிக்கப் பட்ட சேமிப்பு வங்கிகளில் இவ்வங்கி துரித வளர்ச்சி கண்டுள்ளது தென் பகுதித் தேசிய சேமிப்பு வங்கிகளை எம்மோடு ஒப்பிடுகையில் நூற்றுக்குப் பத்து வீத வளர்ச்சியையே பெற்றுள்ளன என்பது குறிப்பிடத்தக்கதாகும். இங்கு ஆயிரத்திற்கும் மேற்பட்ட சேமிப்புக் கணக்குள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.''

இவ்வாறு சுன்னாகம் தேசிய சேமிப்புக் வங்கிக் கிளையின் முகமையாளர் திரு. சி. சிவராசா முரசொலிக்குத் தெரிவித்தார்.

''கிராமத்திலுள்ள ஏழை மக்களின் சேமிப்புப் பழக்கத்தை வளர்ப்பதே எமது நோக்கமாகும். இதற்காகச் சர்வோதயத்தின் உதவியுடன் கிராமந்தோறும் சேமிப்புக் கணக்குகளை ஆரம்பித்துச் சேமிப்பு உண்டியல்களை வழங்கி வருகிறோம். பின்னர் மாதாந்தம் அவ்வுண்டியலிலிருந்து சேமிப்புப் பணத்தைப் பெற்று வைப்பிலிடுகிறோம்.

இது தவிர பாடசாலை மாணவர்களிடமும் சேமிப்புக் கணக்குகளை ஆரம்பிப்பதற்காக விரைவில் பாடசாலைகளுக்கும் செல்லவுள்ளோம். அத்துடன் கூட்டுறவுத்தாபன, கூட்டுறவு தாபனங்களில் வேலை செய்யும்ஊழியர்களுக்கென ஓய்வூதியத் திட்டம் ஒன்றையும் அறிமுகப் படுத்தியுள்ளோம்' என்று அவர் மேலும் சொன்னார்.

# எம்மால் துரத்தப்பட்ட கும்பலுடன் இலங்கை அரசு பேசுகின்றது

தினேஷ்

(நாவற்குழி)

'எம்மால் துரத்தப்பட்ட கும்பலை அழைத்து இலங்கை அரசாங்கம் பேச்சுவார்த்தை நடாத்துகிறது. ஆகவே பொது மக்களாகிய நீங்கள் விழிப்பாயிருங்கள். எந்தக் கட்டத்திலும் எதையும் செய்யத் தயாராக இருங்கள்''

இவ்வாறு சாவகச்சேரி நகர சபை மைதானத்தில் நடைபெற்ற தேனிசை செல்லப்பாவின் இசை நிகழ்ச்சியின் போது தமிழீழ விடுதலைப் புலிகளின் தென்மராட்சிப் பொறுப்பாளர் திரு. தினேஷ் பேசுகையில் தெரிவித்தார்.

தென்மராட்சி அரசியல் பொறுப்பாளர் திரு. பாப்பா தலைமையில் நடைபெற்ற இக்கூட்டத்தில் திரு. தினேஷ் தொடர்ந்து பேசுகையில் ''இப்போதுள்ள சுமுகமான, அமைதியான நிலையை வைத்து நாம் எல்லாவற்றையும் பெற்றுவிட்டோம் என நினைக்கக்கூடாது. இனித்தான் எமக்கு அச்சுறுத்தல்கள் உண்டு. ஆகையால் எந்த அச்சுறுத்தலையும் மக்கள் துணிவுடன் எதிர்கொள்ளத் தயாராகவேண்டும். எமது விடுதலைப் புலிகள் இயக்கத்தை இந்த அளவிற்கு வளர்த்தது நீங்களே'' என்று தெரிவித்தார்.

தலைமை தாங்கிப் பேசிய தென்மராட்சி அரசியல் பொறுப்பாளர் திரு. பாப்பா பேசுகையில் ''இந்திய இராணுவம் வந்து கொலை வெறியாட்டம் நடத்திய பின்பு எமது மண்ணில் அதேநாட்டைச் சேர்ந்த ஒரு கலைஞர் எமது இயக்கத்திற்காகப் பாடுகின்றார் என்றால் அவரின் விடுதலை உணர்வை நாம் உணரக்கூடியதாக இருக்கிறது'' என்று குறிப்பிட்டார்.

புலிகளின் தென்மராட்சி மகளிர் பிரிவுப் பொறுப்பாளர் செல்வி அமுதினி பேசுகையில் ''எமது சுயநிர்ணய உரிமை கிடைக்கும்வரை நாம் தொடர்ந்து போராடுவோம். அதுமக்கள் போராட்டமாக மாறவேண்டும். எமது உரிமைகளைப் பெறுவதற்காக எமது போராட்டங்களின் வடிவம் மாறுமேயொழிய எமது இலட்சியம் துளியேனும் மாறாது'' என்றார்.

தமிழீழவிடுதலைப் புலிகளின் கலை,கலாசாரப் பிரிவுப் பொறுப்பாளர் திரு. புதுவை இரத்தினதுரை பேசுகையில் ''எமது இயக்கத்திற்காக பல புரட்சிப் பாடல்களைம் பாடும் திரு. தேனிசை செல்லப்பா எமது இயக்கத்துடன் தொடர்பு பட்டிருந்ததால் சென்னை வானொலி சென்னைத் தொலைக் காட்சி நிலைய வாய்ப்புக்களைக் கூட இழந்தார்'' என்று தெரிவித்தார்.

நிகழ்ச்சியின்போது தேனிசை செல்லப்பாவிற்கு தென்மராட்சிப் பொறுப்பாளர் திரு. குணா தங்கப் பதக்கம் அளித்துக் கௌரவித்ததோடு ஏனைய இசைக் கலைஞர்களுக்குத் தங்க மோதிரங்கள் கொடுத்துக் கௌரவித்தார். தென்மராட்சி மகளிர்பிரிவுப் பொறுப்பாளர் செல்வி அமுதினி பாடகி சுவர்ணலதாவிற்கும், செல்வி சாந்திக்கும் தங்கச் சங்கிலிகள் அணிவித்துக் கௌரவித்தார். (ப.5)

## மே தின மேடையில் மாபிள் கழிவறைகள்?

மே தினத்துக்காக ஐ. தே. க. காலி முகத்திடலில் அமைத்த மேடையில் விசேடமாக மாபிள் பதிக்கப்பட்ட கழிவறைகளும் அமைக்கப்பட்டனஎன்று பாராளுமன்றத்தில் குற்றம் சுமத்தப்பட்டது.

'இந்த ஆடம்பரங்களுக்காக பொதுமக்களின் பணம் வீண் விரயம் செய்யப்பட்டுள்ளது' என்றும் இக்குற்றச் சாட்டைச் சுமத்திய திரு. வி. சி. குணரத்ன எம். பி கூறினார்.

ஆனால் அரசுதரப்பில் இதற்கு மறுப்புத் தெரிவிக்கப் பட்டது.

## சேமிப்பின் அளவு அதிகரித்தால் கிராம வளர்ச்சி அதிகரிக்கும்

சங்கத்தின் அங்கத்தவர் தொகையை அதிகரிப்பதிலும் விட அங்கத்தவரிடையே சேமிப்புப் பழக்கத்தை அதிகரிக்கச் செய்ய ஒவ்வொரு நிர்வாகியும் பாடுபடவேண்டும் அங்கத்தவரின் சேமிப்புத் தொகை அதிகரிக்கும் பட்சத்தில் கிராமத்தின் நாட்டின் வளர்ச்கிக்கு அவற்றைப் பயன்படுத்தமுடியும்.

இவ்வாறு முகமாலை இந்திராபுரம் சிக்கன கடன் வழங்கு கூட்டுறவு சங்கத்தினால் ஒழுங்குசெய்யப்பட்ட ஐந்தாண்டு வேலைத்திட்ட கருத்தரங்கில் பிரதம விருந்திஙராக கலந்து கொண்ட அகில இலங்கை சிக்கனகடன்வழங்கு கூட்டுறவுச் சங்கங்களின் சம்மேளன வடகிழக்கு பிராந்தியப் பணிப்பாளர் எஸ். இராசரத்தினம் பேசுகையில் தெரிவித்தார்.

சங்கத் தலைவர் கி.கனகசபை தலைமையில் நடைபெற்ற இவ்விழாவில் பளை ப. நோ. கூ. சங்க தலைவர் ஏ. பீ. ஜோர்ஜ் கிளிநொச்சி மாவட்ட சி. கூ. வ. கூ. சங்கங்களின் சமாசச் செயலாளர் செல்வி கந்தையா ஆசிரியர் கா. வேலாயுதம்பிள்ளை உட்படப் பலர் உரையாற்றினர். (ப. 3)

## மானிப்பாய்க்கு இடமாற்றம்

மருதானை தொண்டர் வித்தியாலத்தில் கடந்த ஏழு வருடங்களாக ஆசிரியராகக் கடமையாற்றிய திரு. எஸ். பி தவராஜா இத்தவணை முதல் மானிப்பாய் இந்துக் கல்லூரிக்கு இடமாற்ற லாகியுள்ளார் (30)

## 'தமிழீழத்தில் நீதியும் சமத்துவமும் வேண்டும்'

(கிளிநொச்சி)

கிளிநொச்சி நகரில் இணக்க சபை அங்குரார்ப்பண வைபவம் நகரமண்டபத்தில் விடுதலைப்புலிகளின் மக்கள்முன்னணி நகரப்பொறுப்பாளர் திரு.பிரசாத் தலைமையில் இடம்பெற்றது.

இவ்விழாவில் கிளிநொச்சி மாவட்ட இணக்கசபைப் பொறுப்பாளர் திரு.அலெக்சாண்டர் பேசும் போது 'மக்களுக்கு நீதிகிட்ட உறுப்பினர்கள் அரும்பாடு படவேண்டும். தமிழ் ஈழத்தில் நீதியும் சமத்துவமும் கிடைக்க விடுதலைப் புலிகளின் மக்கள் விடுதலை முன்னணி பாடுபட்டு வருகிறது. ஒழுக்கமும் கண்ணியமும் பேணிப் பக்கச் சார்பற்ற முறையில் நீதியை வழங்க வேண்டும்' என்று தெரிவித்தார்.

இச்சபைக்கு பத்து உறுப்பினர்கள் தெரிவுசெய்யப்பட்டனர். (35)

### 6-வது சட்டத்திருத்தம் குறித்து யோகி

## பாராளுமன்றத்தில் தோல்வி ஏற்பட்டால் விருப்பமில்லாதோரை இனங்காணலாம்

ஆறாவது சட்டத் திருத்தம் இருக்கும் வரை நாம் அரசியல் நீரோட்டத்தில் கலந்து கொள்ள மாட்டோம். இதில் எந்தவிதக் குழப்பமும்எமக்குக் கிடையாது. இவ்வாறு கட்டைபறிச்சானில் இடம் பெற்ற நிகழ்ச்சியில் விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணியின் செயலாளர் நாயகம் திரு. யோகி பேசுகையில் தெரிவித்தார் அவர் மேலும் பேசுகையில்.

நாம் அரசினைக் கேட்பதெல்லாம், இந்தச் சட்டத் திருத்தத்தை நீக்குவதற்காக விரைவில் நடவடிக்கை எடுங்கள், பாராளுமன்றத்தில் இச் சட்டத்திருத்தத்தைநீக்குவதற்கான பிரேரணையைக் கொண்டு வரும்போது யார், யார் என்னென்ன நிலைப்பாட்டை எடுக்கிறார்கள் என்பதை நாம் அறிந்து கொள்ள முடியும்.

இச் சட்டத் திருத்தத்தை நீக்குவதில் தோல்வி ஏற்பட்டால், அது யாரால் என்பதையும் புரிந்து கொள்ள முடியும் அது மட்டுமல்ல; பாராளுமன்றத்தில் இந்தப் பிரச்சினையைத் தீர்ப்பதற்கு அவர்கள் விரும்பவில்லை என்பதையும் அது இனங்காட்டிவிடும்,

இந்தச் சட்டத்தைத் திருத்த இந்தப் பாராளுமன்றத்துக்கு முடியாவிட்டால் இந்தப் பாராளுமன்றத்தால் வேறு எதையுமே பெரிதாகச் சாதித்து விடவும் முடியாது. இன்று பலம் பொருந்திய அமைப்பாக தமிழீழ விடுதலைப் புலிகளின் மக்கள் முன்னணி விளங்கிவருகின்றது.

இது இந்துக்களின்அமைப்போ கிறீஸ்தவர்களின் அமைப்போ அல்லது முஸ்லீம்களின் அமைப்போ அல்ல, இது தமிழ் பேசும் மக்களின் விடுதலை அமைப்பாகும். இந்த அமைப்பின் கீழ் இலங்கைத் தமிழ் பேசும் மக்கள் அனைவரும் ஒன்றுபடவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன் என்று அவர் தெரிவித்தார்.

# கிழக்குச் செய்திகள்

## வெல்லாவெளியில்..

வெல்லாவெளி உதவி அரசாங்க அதிபர் பிரிவுக்குட்பட்ட தேசிய இளைஞர் சேவை மன்றத்தின் இளைஞர் கழகங்களின் வெல்லாவெளிப் பிரதேச இளைஞர் கழக சம்மேளனக் கூட்டம் அண்மையில் நடைபெற்றது.

வெல்லாவெளிப் பிரதேச உதவி இளைஞர் சேவை அலுவலர் திரு. எம். கோபாலரத்தினம் தலைமையில் நடைபெற்ற இக்கூட்டத்தில் சிறப்பு விருந்தினராக உதவி அரசாங்க அதிபரான திரு எஸ். சாமித்தம்பி கலந்து கொண்டார்.

## ஆசிரியரின்றி அவதி

அக்கரைப்பற்று கோட்டக்கல்வி பிரதேசத்தில் ஆசிரியர்களின் பற்றாக் குறைவினால் ஆரம்பக் கல்வி மிகவும் பாதிக்கப்பட்டு வருகின்றது.

ஆரம்பக் கல்வி கற்பிப்பதற்கு 225 ஆசிரியர்களாவது அவசியம் தேவையாகவுள்ளது. சமீபத்தில் இந்தப் பிரதேசத்தில் 65 ஆசிரியர்கள் நியமனம் செய்யப்பட்ட போதிலும் அந்த ஆசிரியர்களின் தொகைக்கு அதிகமாக புதிய மாணவர்கள் சேர்ந்திருக்கின்றார்கள்.

ஆங்கிலம், சித்திரம் சமூகக்கல்வி போன்ற பாடங்களுக்கும் ஆசிரியர்கள் இல்லை. கணித பட்டதாரிகளும் இல்லை.

## திருக்கோவில் திருநாள்

திருக்கோவில் புனித சூசையப்பர் தேவாலயத்தின் வருடாந்த திருநாள் சமீபத்தில் சிறப்பாக நடைபெற்றது.

திருநாட் பலிப்பூசையை மேதகு ஆயர் கிங்ஸ்லி சுவாம்பிள்ளை முன்னின்று நடத்தி வைத்தார்.

இத்திருநாளுக்கான ஏற்பாடுகளை திருக்கோவில் பங்குத் தந்தை அருட்திரு ஜோர்ஜ் திசநாயக மேற்கொண்டிருந்தார்.

## ஓய்வூதியக் கொடுப்பனவு

மட்டக்களப்பு மாவட்டத்திற்கான ஓய்வூதிய கொடுப்பனவுகள் யாவும் எதிர்வரும் யூன் மாதம் முதல் தபால் அலுவலகங்களினால் வழங்கப்படவுள்ளன.

எனினும், முன்னர் போன்று சகல உப தபால் அலுவலகங்களில் ஓய்வூதிய கொடுப்பனவுகள் வழங்கப்படமாட்டாது.

கல்குடா, ஏறாவூர், வாழைச்சேனை, செங்கலடி, மட்டக்களப்பு, கோட்டைமுனை, காத்தான்குடி, களுவாஞ்சிக்குடி, பெரியபோரதீவு ஆகிய தபால் அலுவலகங்களில் இவ்ஓய்வூதிய கொடுப்பனவுகள் வழங்கப்படும்.

## 4686 வீடுகள் அமைப்பு

அம்பாறை மாவட்டத்தில் இந்த வருடத்தில் தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகார சபையினால் 4686 வீடுகள் அமைக்கப்படவிருக்கின்றன.

மாதிரிக்கிராமங்கள் அமைக்கும் திட்டத்தின் கீழ் 1736 வீடுகளும் மீனவர்களுக்கு 130 வீடுகளும் சுய உதவித் திட்டத்தின் கீழ் மத்திய வகுப்பினருக்கு 212 வீடுகளும் சுய உதவித் திட்டதின் கீழ்2253 வீடுகளும் வீடமைப்புத்திட்டத்தின் கீழ் 553வீடுகளும் ஒருஇலட்சம் வீடமைப்புத்திட்டத்தின்கீழ் அமைக்கப்படவிருக்கின்றன.

இவ் வீடுகளுக்குத் தேவையான நிதியின் பெரும்பகுதி புனர்வாழ்வு அமைச்சின் நிதியில் இருந்து பெற்றுக்கொள்ளப் படவுள்ளது.

## மின்னல் போன்ற வாழ்வே

வயலில் வேலை செய்து கொண்டிருந்த ஆசிரியர் ஒருவர் மின்னல்தாக்கி ஸ்தலத்திலேயே இறந்தார்.

காரைதீவைச் சேர்ந்த கந்தப்பன் உருத்திரன் என்பவரே மின்னலால் தாக்குண்டவராவார்.

## பரீட்சை மாத்திரம் இங்கு

திருகோணமலை மாவட்டத்தில் வாழும் சில மாணவர்கள் யாழ்நகரில் க. பொ. த. உயர் வகுப்பில் படித்து விட்டு மீண்டும் திருகோணமலைக்கு வந்த பரீட்சை எழுத விண்ணப்பித்துள்ளனர் என்று தெரிவிக்கப்படுகின்றது.

இதனால் இம்மாவட்டத்தில் தொடர்ந்து கல்விபயிலும் மாணவர் பெரும் பாதிப்புறும் நிலை தோன்றியுள்ளது.

இதனைத்தடுத்து நிறுத்துவதற்கான உடன் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட வேண்டும் எனக் கோரப்படுகின்றது.

## இலவச ஆங்கில வகுப்பு

வெல்லாவெளி உதவி அராசங்க அதிபர் பிரிவுக்குட்பட்ட காந்திநகர் வெல்லாவெளி, வன்னிநகர், முனைத்தீவு திக்கோடைப் பகுதிகளில் வசிக்கும் இளைஞர், யுவதிகளின் நலன் கருதி தேசிய இளைஞர் சேவைகள் மன்றத்தின் மட்டக்களப்பு மாவட்ட அலுவலகத்தால் இலவச ஆங்கிலப் பயிற்சி வகுப்பு ஒன்று ஆரம்பிக்கப்பட்டுள்ளது

பழுகாமம் மகாவித்தியாலயத்தில் இப்பயிற்சி நெறி 6 மாத காலம் இடம்பெறும், இதில் 60 இளைஞர், யுவதிகள் சேர்த்துக் கொள்ளப்பட்டுள்ளனர் என்று மாவட்ட இளைஞர் சேவை அலுவலர் திரு. வி,பேரின்பநாதன் தேரிவித்தார்.

## முரசொலிக்கு வந்த கடிதம்

### இவர்களுக்குநிவாரணம்இல்லையா?

ஆசிரியர்
முரசொலி

கூட்டுறவு ஊழியர்கள் நாட்டில் ஏற்பட்ட அசம்பாவித காலங்களில் எல்லாம் தமது உயிரையும் பாராது பட்டினியின் விளிம்பில் மக்கள் கஷ்டப்பட்ட போதெல்லாம் கடமையாற்றிப் பாதுகாத்தவர்கள். இச்சந்தர்ப்பங்களில் பல சங்கங்கள் பணியாளர்களையும், உடமைகளையும் இழந்தமையை எல்லோரும் அறிவர். பல, நோ. கூ. சங்கத்தில் உள்ளஊழியர்களின் வேதனமும் குறைவானது. ஆனால் கூடுதலான உடலுழைப்பை உடையவர்கள். இவர்களுக்கு அரசாங்கத்தால் ஏற்றப்படும் வாழ்கைச் செலவுப்படியை வழங்காத பலசங்கங்கள் உள்ளது. இந்நிலையில் இவர்களுக்கு உணவு முத்திரை, நிவாரணக் கொடுப்பனவுகள் மற்றும் அரச மானியங்கள் வழங்கப்படாதது. மிகவும் வேதனைக்குரியது.

எனவே சம்பந்தப்பட்ட கூட்டுறவு அமைச்சர் சமூக சேவைகள் புனர் வாழ்வு அமைச்சர் மற்றும் கூட்டுறவுத் திணைக்கள அதிகாரிகள் இது விடயத்தில் கவனமெடுத்து நிவாரண ம்மற்றும் இதர மானியங்கள் வழங்க நடவடிக்கைகள் எடுப்பார்களா?

கூட்டுறவு ஊழியர் தொழிற்சங்கம், — லோகேஸ்வரன்
நெடுந்தீவு பல, நோ. கூ. சங்கம், — செயலாளர்

### வைத்தியசாலை மருந்துகள் வெளியில் தாராள விற்பனை

ஆசிரியர்
முரசொலி

புங்குடுதீவு அரசினர் வைத்தியசாலைக்கு ஓர் பிரதம வைத்திய அதிகாரி பல ஆண்டுகளாக நியமிக்கப்படவில்லை. ஓர் பிரதம வைத்திய அதிகாரி இல்லாத காரணத்தினால் இங்கு பல நிர்வாகச் சீர்கேடுகள் காணப்படுகின்றன. அத்துடன் இங்கு வரும் பெறுமதியான மருந்து ஏழை மக்களுக்கு சென்றடைவதில்லை. மருந்துகள் ஏதோவிதமாக வெளியே எடுத்துச் செல்லப்பட்டு பல இடங்களில் விற்கப்படுகின்றன. இதற்குப் பொறுப்பான அதிகாரியாக ஓர் D. M. O இங்கு இல்லாத நிலைமையைச் சம்பந்தப்பட்ட சுகாதார அதிகாரிகள் கவனிக்கவேண்டுமென கேட்டுக் கொள்கின்றோம்.

புங்குடுதீவு — த. ஏரம்பமூர்த்தி

## உயர்கல்வித் திட்டம் பற்றி ஆராய விசேட கமிட்டி

உயர் கல்வித் திட்டத்தை மாற்றி அமைத்தல் பிரதேச பல்கலைக்கழகக் கல்லூரிகள் அமைத்தல் என்பன குறித்து ஆராய்ந்து அறிக்கைசமர்ப்பிக்கவெனபல்கலைக்கழகமானிய ஆணைக்குழுவிசேட கமிட்டி ஒன்றினை நியமித்துள்ளது.

இதே வேளை உப வேந்தர்கள் மேற்படி இருவிடயங்கள் குறித்து தனித் தனியாக ஆணைக்குழுவுடன் பேச்சு வார்த்தைகள் நடத்துவர்.

மேற்படி இரு விடயங்களும் தம்மையே பெரிதும் பாதிப்பதால் இவ்வாறு தனித் தனியாகப் பேச்சு வார்த்தை நடத்துவது எனத் தீர்மானித்திருப்பதாக உபவேந்தர்கள் தெரிவித்துள்ளனர்.

## ஞானபாஸ்கரோதய சங்க 70 வது ஆண்டு விழா

கல்வியங்காடு ஞானபாஸ்கரோதய சங்கத்தின் 70வது ஆண்டுநிறைவுவிழாகலைகலாசார, விளையாட்டு விழவாக நடைபெற்றது. திரு,க.முத்துலிங்கம் தலைமையில்நடைபெற்ற இவ்விழாவிற்கு பிரததமவிருந்தினராக கோப்பாய் உதவி அரசாங்க அதிபர் திரு. கிருஷ்ணன் கலந்து கொண்டார்.

சைக்கிள் ஓட்டத்திற்கான தங்கப்பதக்கங்ளை ஆண்கள் பிரிவில் செல்வன் க.யோகராசாவும் பெண்கள் பிரிவில் செல்வி. த. தர்சினியும் பெற்றுக் கொண்டார்கள் மரதனோட்டத்திற்கான முதலாம் பரிசினை செல்வன் வீ. ஞானராஜ் பெற்றுக் கொண்டார் அத்துடன் விளையாட்டுப் போட்டிகளில் வெற்றி வீரர்களாகத் திகழ்ந்தவர்களுக்கு வெற்றிக் கிண்ணங்கள் பரிசளிக்கப்பட்டன,

பேச்சு, சங்கீதம், புல்லாங்குழல் நிகழ்ச்சிகளில் பரிசில் பெற்றவர்களுக்கும் பரிசில்கள் வழங்கப்பட்டன, (25)

## கசூரினா பீச்சுக்கு சென்றோர் காயத்துடன் மீண்டனர்

விடுமுறையைச் சந்தோஷமாகக் கழிப்பதற்காக காரை நகர் கடற்கரைக்குச் சென்றவர்கள் மினிவான் தடம் புரண்டதால் பலர் காயங்களுக்குள்ளாகியாழ். போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்கள்.

அரியாலையைச் சேர்ந்த சுமார் இருபதிற்கும் மேற்பட்ட இளைஞர்கள் காரை நகர் கடற்கரைக்குச் சென்று குளித்துவிட்டு திரும்பி வருகையிலேயே மேற்படி விபத்து ஏற்பட்டது.

காயமடைந்தவர் விபரம்; அன்னலிங்கம்(26) அரியாலை, ச. சந்திரநாதன்(29) அரியாலை, செல்வம்(40) அரியாலை, சிவகுமார் (32) அரியாலை, சந்திரகுமார்(30) நல்லூர், சாந்தகுமாரி (24) அரியாலை. (47)

## வவுனியா கலை, விளையாட்டு விழா

# தமிழ் இளைஞரின் திண்மை வெளிப்பட வழி வகுத்தது

(வவுனியா)

''தமிழ் இளைஞர்கள் எதிலும் சளைத்தவர்கள் அல்லர் என்பதினை இவ்விளையாட்டு விழா எடுத்துக் காட்டியுள்ளது. பெருமளவு இளைஞர்கள் இவ் விழாவில் கலந்து கொண்டதினையிட்டு மகிழ்ச்சியடைகின்றேன்''

உதவி அரச அதிபர் திருமதி எமில்டா அற்புதராஜா புதுக்குளம் சித்திவிநாயகர் விளையாட்டு விழாவின் பரிசளிப்பு வைபவத்தில் பேசுகையில் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

கழகத்தலைவர் திரு வீ. எஸ் ஆனந்தன் தலைமையில் பரிசளிப்பு விழா கழக மேடையில் இடம் பெற்றது.

''திடகாத்திரமான சமுதாயத்தினை கட்டிஎழுப்ப ஒவ்வொருவருக்கும் விளையாட்டு அவசியமானது'' என்றும் உதவி அரச அதிபர் தனது பேச்சில் குறிப்பிட்டார்.

வன்னிமாவட்ட விடுதலைப் புலிகள் கலை, கலாசார பொறுப்பாளர் திரு போசன் தனது உரையில்:-

''வடக்கு-கிழக்கு 40 இலட்சம் தமிழ் பேசும் மக்களை பாதுகாக்கின்ற படையாக இன்று புலிகள் திரண்டுள்ளனர்.

எமது இலட்சியம் நிறைவு பெறவேண்டும் என்றால் மக்கள் திரளவேண்டும்.

இம் மண்ணுக்காக தம்முயிரை தியாகம் செய்த வட கிழக்கு இளைஞர்களை இத் தருணத்தில் நினைத்துப்பார்க்கின்றோம்'' என்றார்.

வவுனியா மாவட்ட விடுதலைப்புலிகள் மகளிர் முன்னணிப் பொறுப்பாளர்செல்வி ரதி இங்கு பேசுகையில்.

''எந்தவொரு விடயத்திற்கும் மன உறுதியும், ஊக்கமும் தேவை. அந்தவகையில் இன்று விளையாட்டுப் போட்டியில் தோல்வி கண்டவர்கள் அதனை பெரிதுபடுத்தாது அடுத்த போட்டிக்கு இன்றே தயார் ஆகுங்கள். வெற்றி உங்கள் பக்கம் இருக்கும்'' என்றார்.

நெளுக்குளம் கிராமோதய சபைத் தலைவர் திரு. என். சேனாதிராஜா இங்கு பேசுகையில்:

''இந்த மேடையில் மாதம் ஒரு கலை நிகழ்ச்சி இடம் பெற்று எமது கலை கலாசாரம் வளர்க்கப்பட வேண்டும். கிராமிய கலைகள் வளர்க்கப்படவேண்டும்'' என்றார்.

மேற்படி கழகபோசகர் திரு. கே. சிவராஜா, கொத்தணி புதுக்குளம் அதிபர் திரு. ஐ. இராஜரட்ணம், வடகிழக்கு மாகாண விளையாட்டு அமைச்சின் உதவிப் பணிப்பாளர் திரு குணரட்ணம் கிராமசேவையாளர் திரு. உமாபதி ஆகியோரும் பேசினார்கள்.

புதுக்குளம் சிற்றூர் அவைத் தலைவர் திரு. க. கனகசபை நன்றியுரை தெரிவித்தார்.

### 'முரசொலி'க்கு ஏகோபித்த பாராட்டு

பின்தங்கியுள்ள வன்னிப் பிரதேசத்தில் இப்படியான ஒரு விழாவினை நடாத்த யாழ்ப்பாணத்திலிருந்து வெளியாகும் தேசிய தினசரியான முரசொலி நிறுவனம் முன்வந்ததினையிட்டு பரிசளிப்பு விழாவில் பேசிய அனைவரும் பாராட்டினார்கள்.

முரசொலியின் சேவை வன்னிப்பகுதிக்கு மேலும் விஸ்தரிக்கப்படவேண்டும் அதற்கு ஒத்துழைக்க தாம் தயார் என்று விழாவில் பேசியவர்கள் குறிப்பிட்டனர்.

முரசொலி ஆளுநர் சிவராசாவுக்கு விசேடமான நன்றியினை புதுக்குளம் சித்திவிநாயகர் விளையாட்டுக் கழகத்தினரும் சிற்றூர்அவையினரும் தெரிவித்துக் கொண்டனர்.

பல ஆண்டு இடைவெளிக்கு பின்பு தமிழ் தினசரி ஒன்றின் அனுசரணையுடன் இப்படியானவிழா ஒன்று வன்னியில் நடந்துள்ளது பெருமைக்குரியது. எனப்புகழப்பட்டது.

புதுக்குளம் சித்திவிநாயகர் விழையாட்டுகழகம்முரசொலியின் அனுசரணையுடன் வடகிழக்கு மாகாண வீரர்கள் கலந்து கொண்ட 115 மைல் மரதன் சைக்கிள் ஓட்டப் போட்டியினை மிகவும் சிறப்பாக நடாத்தி முடித்தது.

இப்போட்டிக்குரிய முதலாவது பரிசான 'சாலியை' வி. என். எஸ். உதயச்சந்திரன் அவர்களும் முரசொலி விநியோக முகாமையாளர் ஸ்ரீகரன் அவர்களும் மட்டக்களப்பு அன்ரனி ஐவன் அவுஸ்கோனிடம் கையளித்தனர்.

இப்போட்டியில் ஐந்தாவது இடத்தினை பெரும்பான்மை சமூகத்தினைச் சேர்ந்த 18 வயதான ரட்ணசிறி பண்டார பெற்றிருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது. (11)

## இலட்சார்ச்சனை இன்று ஆரம்பம்

நாரந்தனை - சரவணை கர்ணன் தோட்டம் ஸ்ரீ சிவசுப்பிரமணிய சுவாமி கோவில் இலட்சார்ச்சனை இன்று தொடங்கி ஐந்து நாட்களுக்கு சிறப்பாக நடைபெறவுள்ளது.

## சித்தன்கேணியில் சிறு நூலக அங்குரார்ப்பணம்

(சித்தன்கேணி)

சித்தன்கேணி கலைநகர் நேருஜி மாதர் கிராம முன்னேற்றச் சங்கத்தினரின்' சிறு நூலக' அங்குரார்ப்பண வைபவம் நேருஜி மாதர் கிராம முன்னேற்றச் சங்க மண்டபத்தில் இம்மாதம் 27ம் திகதி ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 2 மணியளவில் கலைநகர் நேருஜி கிராம முன்னேற்றச் சங்க சனசமூக நிலையத் தலைவர் சைவப் புலவர் நா. க. தங்கரத்தினம் (நகுலன்) அதிபர் தலைமையில் நடைபெறவுள்ளது.

பிரதம விருந்தினர்களாக அறவழிப் போராட்டக் குழுத் தலைவர் க. கோபாலகிருஷ்ணரும் 'போரூட்' சிரேஷ்ட திட்ட இணைப்பதிகாரி க. கணேசலிங்கமும் கலந்துகொள்வார்கள்.

சிறப்பு விருந்தினர்களாக சுழிபுரம் கிழக்கு கிராமசேவையாளர் வி.ரி. கதிர்காமநாதன் வே.கந்தசாமி, ஜே.பி.இளைப்பாறிய அதிபர் வே தம்பையா சட்டத்தரணி த.மு.கதிர்காமநாதன், வட்டு.வடக்கு கிராம சேவையாளர் திருமதி தி. சிவபாக்கியநாதன் ஆகியோர் கலந்து கொள்வார்கள். (12)

## சுவையான செய்திகள்

### காதல்வாகனம் ..விற்கமாட்டேன்..

லாஸ் வேகாஸ் நகரைச் சேர்ந்த 21 வயது இளைஞரான ஆண்டிசாண்டர் ஒரு கார் பைத்தியம். இவர் தனது கனவுக் காராக மிகச் சிறிய காரை நொருங்கிய ஒரு 1964 மினிக் காரை உடைத்து அதன் பாகங்களைக் கொண்டு உருவாக்கியிருக்கின்றார் இதில் இன்னும் ஆச்சரியம் என்னவென்றால் இளம் பெண்கள் எல்லாம் இந்தக் காரில் சல்லாபமாகச் செல்ல இவரிடம் லிப்ட் கேட்கின்றார்களாம். இந்த ஒற்றைக் கதவு 'மினி ஹாஹா' காரிலேயே இவர் உல்லாசமாகச் செல்கிறார். இந்தக் காரைச் சிலர் 2500 டாலர் வரை விலைக்குக் கேட்கிறார்கள்.

### 'பட்ட காலிலே படும்'

ஒரே குடும்பத்தைச் சேர்ந்தவர்கள் ஒரே விபத்தில் அடிபடுவது, அதை ஒட்டிச் சிகிச்சை பெறுவது இவை எல்லாம் அடிக்கடி நடப்பவைதான். ஆனால் தெற்கு இங்கிலாந்தைச் சேர்ந்த ஒரு பகுதியில் ஒரே குடும்பத்தைச் சேர்ந்த மூவர் கணவன், மனைவி, பிள்ளை ஆகியோர் வெவ்வேறு விபத்தில் ஒரே வாரத்தில் மாட்டிக் கொண்டார்கள். என்ன அதிசயம்? மூன்று பேர்களுக்குமே விபத்து வலது காலில் ஏற்பட்டு காலில் கட்டுப் போட்டுக் கொண்டு ஊன்று கோலுடன் உலா வருகிறார்கள் இந்த ஒற்றுமைத் திலகங்கள்.

### ட்றெகுலா பற்களுடன்...

பயங்கர நாடகங்களை நடத்துவதில் பெயர் பெற்ற ஒரு குழு பிரிட்டனிலுள்ள எக்ஸக்ஸ் ரிப்பர்டரி தியேட்டர். இது 'ட்றெகுலா ஸ்பெக்டகுலர்' என்ற நாடகத்தை அண்மையில் போட்டது. பயங்கரமான இந்த நாடகத்தைப் பார்க்க வந்த அனைவரிடமும் நீளமான ட்றெகுலா பற்களைத் தந்து பொருத்திக் கொண்டபடி நாடகத்தைப் பார்க்கச் செய்தார்கள்.

# சுன்னாகம் ஸ்ரீ கதிரமலைச்சிவன் தேவஸ்தான

# தேர் உற்சவ சிறப்பு மலர் - 23 - 05 - 1990


தேர் உற்சவம் சிறப்புற நடைபெற
வாழ்த்துபவர்கள்

**அம்பாள்ஸ் பேயின்ற் ஹவுஸ்**
கே. கே எஸ் வீதி,
சுன்னாகம்.

**A.பேரம்பலம் அன் சன்ஸ்**
கே. கே. எஸ். வீதி,
சுன்னாகம்.

**ஜெயறாம்ஸ் ஜெயகௌரி**
5, மத்திய சந்தை,
சுன்னாகம்.

**சகீதா ஜுவலர்ஸ்**
32, கே. கே. எஸ். வீதி,
சுன்னாகம்.

**இரத்தினம் மில்**
ஸ்ரேஷன் வீதி,
சுன்னாகம்.

**பட்டப்படிப்புகள் கல்லூரி**
148/1, ஸ்ரான்லி வீதி,
யாழ்ப்பாணம்.

**செல்வம் ஆட்ஸ்**
51, 52 சந்தை தெற்கு வீதி,
சுன்னாகம்.

**இந்திர பாலாஸ் பார்மஸி**
108, கே. கே. எஸ் வீதி,
சுன்னாகம்.

**துர்க்கா ஸ்ரேஷனேர்ஸ்**
சுன்னாகம்.

**ராஜு பேக் ஹவுஸ்**
(நூல் நிலைய அருகாமை)
கே. கே. எஸ். வீதி, சுன்னாகம்.

**தென் சுன்னையூர் சிவபூதராயர்**
**சிக்கன கடனுதவு கூட்டுறவுச்சங்கம்**
முருகேச பண்டிதர் வீதி,
சுன்னாகம் தெற்கு, சுன்னாகம்


## ஆலய வரலாறு

இலங்கையில் பண்டை நாட்களிலிருந்து மறைந்து போன தமிழ் மன்னர்களின் தலைநகரங்களில் ஒன்று கதிரமலை இராச்சியமாகும். இந்தியாவின் தென்பகுதியும் இலங்கையின் வடபகுதியும் அண்மித்திருக்கும் இயற்கை வாய்ப்பினால் ஒன்றோடொன்று கலந்த தொடர்பு கொண்டவைகளாக நாட்டு வரலாறுகள் இருக்கின்றன. கந்தரோடை, கதிரமலை, தொண்டமனாறு, திருத்தம்பலை, கீரிமலை, மாவிட்டபுரம் முதலிய ஸ்தாபனங்கள் இராச்சியப் பிரசித்தம் உடையதாகும். வங்க தேசத்தை ஆண்ட சிங்கபாகுவின் மகன் விஜயகுமாரன் சொற்பனத்தில் கிடைத்த உத்தரவுப்படி காசியிலிருந்து சிவமூர்த்தங்களை; மனைவி, புத்திரர்கள், மருமக்கள் என்பவர்களுடன் வந்து கதிரமலையில் இராச்சியத்தை ஏற்படுத்தி அங்கு குடிமக்களை வசப்படுத்தி குடியமர்த்தும் நோக்குடன் சமய வழிபாட்டை ஏற்படுத்தி பல சிவாலயங்களையும் அமைத்து சமயாச்சார ஒழுக்கங்களையும் ஏற்படுத்தினான். இதன்பின் இவனது மரபிற் தோன்றிய உக்கிரசிங்க மன்னனும் தொண்டமான், வன்னியர் முதலிய சிற்றரசர்களினுதவியுடன் கதிரமலையை ஆண்டு வந்தான். யாழ்ப்பாண வைபவ மாலை நூலினால் சொல்லப்படும் இவ்வாட்சி வரலாறுகளும், கதிரமலைச் சிவன் கோவில் அமைந்துள்ள மலைப்பாங்கான உயரச் சூழலும் கோவிலை அண்மித்துள்ள புரதானகால கட்டிட இடிபாடுகளும் கந்தரோடைக்கும் கதிரமலைக்குமிடையே சுரங்கப்பாதை உள்ளதெனப் பேசப்படும் கர்ணபரம்பரைக் கதைகளும் மனமுருகி வழிபாடு செய்யும் மெய்யடியார்களுக்கு நல்லருள் புரிந்துவரும் பாணலிங்கமாக (காசிலிங்கம்) அமைந்துள்ள ஸ்ரீசுவர்ணாம்பிகைதேவி சமேத பொன்னம்பலவாண சுவாமிகளின் அருள் நிலையும் சான்றாக அமைந்துள்ளது, யாழ்ப்பாணத்திற்குப் பெருமைதரும் யோக சுவாமிகளின் அதிகரித்த வரவினாலும் அவர் வழிப்படுத்தலில் நடைபெற்ற அன்னதான சிறப்புகளினாலும் இவ்வாலயம் சிறந்ததுடன் மக்களும் மகிழ்வுடன் வாழ்கிறார்கள்.

இவ்வாலயத்தில் சிவனுக்கு அதிசுந்தர திரிதள விமானமும் அம்பாளுக்கு அழகொளிர் துவிதள விமானமும் அமையப்பெற்று விநாயகர், நடேசர், சுப்பிரமணியர், மகாவிஷ்ணு, துர்க்கையம்பாள், தக்ஷணாமூர்த்தி, சனீஸ்வரமூர்த்தி, நவக்கிரகமூர்த்தி, வைரவமூர்த்தி முதலிய பரிவாரமூர்த்தங்களும் அமையப்பெற்று விளங்குகின்றது. வில்வம், நெல்லி, மகிழ், மலைவேம்பு போன்ற புராதன விருட்சங்களினால் சூழப்பெற்ற இவ்வாலயத்தில் அமைந்துள்ள ஏகசக்கர ரதமும் (ஒரு சில்லுடைய தேர்) அதனை ஊதா, கருநீலம், நீலம், பச்சை, மஞ்சள், செம்மஞ்சள், சிவப்பு (V I BGYOR) ஆகிய நிறங்களைக்கொண்ட ஏழு குதிரைகள் அநாயாசமாக இழுக்கும் வடிவமைப்பிலும் உள்ள நவக்கிரக ஆலயம் பல்லோராலும் கவரப்படுவதுடன் எல்லா இடங்களிலுமிருந்து அடியார்கள் வந்து நவக்கிரக வழிபாடு, கிரக சாந்தி, பிரீதி முதலியனசெய்து நோய் நீக்கம், மகப்பேறு, விவாக மங்களம், செல்வ வளம் முதலியன பெற்று வருகிறார்கள். இங்கு சித்திரா பூரணையை அடுத்து வரும் அமாவாசையைத் தீர்த்த தினமாகக் கொண்டு சிவனுக்குப்பத்துத்தினங்களும் ஆடிப் பூரத்தை தீர்த்த தினமாகக் கொண்டு அம்பாளுக்குப் பத்துத்தினங்களும் என இரண்டு மஹோற்சவங்சள் நடைபெற்று வருகின்றன. இக்காலங்களில் ஐந்து குண்டங்கள் அமையப்பெற்ற யாகசாலையில் ஐந்து குருமார்களினால் லட்சார்ச்சனையுடன் கூடிய; விஷேடமான நாற்பது திரவியங்களினால் நடைபெறும் லட்சஹோமமும் மிகச் சிறப்புடையதாகும். ஆடிமாத அம்பாள் உற்சவத்தில் அம்பாளுக்கு சுமங்கலிப் பிரார்த்தனையாக சதுஸ்ஷஷ்டி உபசாரம் எனும் விஷேட பூஜையும் திரவிய பூர்வமாக சிறப்பாக நடைபெறுகிறது.

ஒவ்வொரு வருடமும் பெரிய புராணம், கந்தபுராணம், திருவிளையாடற் புராணம் முதலிய புராணங்கள் படித்து வருகின்றன. வருவதுடன்தினமும் திருமுறைப் பாராயணமும் நடைபெற்றுஇவ்வாலயத்தில் பொதுமக்களின்பெருமுயற்சியினால் 22. 04. 1988 இல் ஆலயம் புனர்நிர்மாணம் செய்யப்பட்டு மகாகும்பாபிஷேகம் செய்யப்பட்டது. மேலும் அடியார்களினுடைய பெருநிதி கொண்ட பதினைந்து லட்சம் ரூபா செலவில் நாகர வடிவமைப்பிலான சித்திரத் தேர் உருவாக்கப்படுகிறது. சென்ற தைப்பூசத்திற்கு பவளக்கால் ஸ்தாபிக்கப்பட்ட இத் தேர்ப்பணி மிக விரைவில் வெள்ளோட்டம் காண உள்ளது. இவ்வரிய ஆலய மஹோற்சவத்தை முன்னிட்டு சகல மக்களுக்கும் அமைதியும் சாந்தியும், சுபீட்சமும் உண்டாகப் பிரார்த்தித்து; இம்மலருக்கான முயற்சியும் விளம்பரமும் உதவிய அன்பர்கட்கு நல்லாசிகளையும் தேவஸ்தான சார்பில் வழங்குகிறோம்.

சுபம்

மலர் அமைப்பு
**சு. ஸ்ரீகுமாரன்**

05154

# சர்வகட்சி மாநாட்டில் புலிகள் பங்குபற்றார்கள்

சர்வகட்சி மாநாட்டில் விடுதலைப் புலிகள் பங்குபற்றமாட்டார்களென அமைச்சர் ஹமீத்திடம் விடுதலைப் புலிகள் திட்டவட்டமாகத் தெரிவித்துள்ளனர்.

சர்வகட்சிமாநாட்டையே அரசு, தமிழ் மக்களின் பிரச்சினையைத்தீர்க்கும் அரங்காக வெளிக்காட்ட முயல்கின்றது என்றும்;


மக்களால் நிராகரிக்கப்பட்ட கட்சிக் குழுவுடன் பேசி இனப்பிரச்சினையை தீர்ப்பதற்கு ஒருபோதும் உடன்படமாட்டோம் என்றும் விடுதலைப் புலிகள் அமைச்சர் ஹமீத்திடம் உறுதியாகத் தெரிவித்துள்ளனர்.

# இறைபற்றும்கடினஉழைப்பும் உடையவர் லோங் அவர்கள்

''இறைபற்றும் கடின உழைப்பும் உடையவர் லோங் அடிகளார். கல்விப்பணிக்கும் மதபோதனைக்கும் வந்த இவர் தான் வாழ்ந்த நாட்டின் மக்களுக்கு தன்னலமற்ற பல சேவைகள் புரிந்தார். இவரது வழிகாட்டலினால் எமது கல்லூரிக்கு பெரும்புகழ் கிடைத்தது.''

இவ்வாறு நேற்று யாழ்புனித சம்பத்திரிசியார் கல்லூரியின் மதுரம் திடலில் இடம்பெற்ற லோங் அடிகளாரின் முத்திரை வெளியீட்டு வைபவத்தில் உரையாற்றிய கல்லூரிஅதிபர் அருட்திரு பிரான்சிஸ் ஜோசப் தெரிவித்தார்.

நேற்றைய தினம் காலை யாழ். பொது நூலகத்தில் அமைந்துள்ள பிதா லோங் அடிகளின் சிலைக்கு யாழ் மாநகர ஆணையாளர் திரு வி. பி. பாலசிங்கம், மன்னார் அரச அதிபர் திரு. செபநாயகம் யாழ். மாவட்ட குரு முதல்வர் வண.பிதா மைக்கல் சாமி ஆகியோர் மலர் மாலை அணிவித்தனர். அதன் பின்



னர் ஊர்வலம் கல்லூரிவரை நடைபெற்றது.

இந் நிகழ்ச்சியில் பிரதம விருந்தினராக யாழ். ஆயர் அதி வண. தியோகுப்பிள்ளை ஆண்டகை கலந்து கொண்டு உரையாற்றினார். அத்துடன் வடமாகாண தபால் அத்தியட்சகர் திரு. ஆர்.எம். சேதுகாவலர், முத்திரையை வெளியிட்டு பிரதமவிருந்தினரிடம் சமர்ப்பித்தார்.

டாக்டர் ஜே. பி. பிலிப், யாழ் அரச அதிபர் திரு அன்ரன் அல்பிரட், மன்னார் அரசஅதிபர் திரு செபநாயகம் திரு. டபிள்யூ. ஜே. பி. ஞானரட்ணம், கல்லூரி மாணவ தலைவன் செல்வன் பி, சி. பிரதீபன் உட்பட பலர் உரையாற்றினர்.

''அயர்லாந்தின் யாழ்ப்பாணத்தான்'' என்ற நூல் வெளியீடும் கலைநிகழ்ச்சிகளும் இடம் பெற்றன. விழாவின் நன்றியுரையை கல்லூரியின் பழையமாணவர் சங்க செயளாளர் திரு. ராஜசிங்கம் வழங்கினார். (03)

# யாழ்.மாவட்ட பயிலுநா ஆசிரியர் மீள் பரிசீலனைக்கு ஆயத்தம்

யாழ் மாவட்டத்தில் தெரிவாகியுள்ள பயிலுநர் ஆசிரியர்களும், மீள் பரிசீலனைக்கு விண்ணப்பித்தோரும் தமது சகல ஆவணங்களையும் ஆயத்தப்படுத்துமாறு கேட்கப்பட்டுள்ளனர்.

நேர்முகப் பரீட்சையின் போது விண்ணப்பத்துடன் இணைக்கப்பட்டு புள்ளிகள் இடப்பட்ட சகல ஆவணங்களினதும் மூலப்பிரதிகள் மீள் பரிசீலனை செய்யப்படவுள்ளன. இதன் காரணத்தினாலே சகலரும் தமது ஆவணங்களின் மூலப்பிரதிகளை பெறுமாறு கேட்கப்பட்டுள்ளனர்.

அடுத்த மாத முற்பகுதியில் இடம் பெறவுள்ள இந்த மீள் பரிசீலனை நடவடிக்கைக்கு குழு வொன்று விரைவில் அமைக்கப்படவுள்ளது. இக்குழுவில் விடுதலைப்புலிகளின் பிரதிநிதி ஒருவரும் அடங்குவார்என்பது தெரிந்ததே(03)

## பேச்சை...

டிக்கை எடுக்கவேண்டுமென்றும் மாகாணசபையைக்கலைத்து தேர்தல் திகதியைக்குறிக்கவேண்டுமென்றும் விடுதலைப் புலிகள் ஹமீத்தைக் கேட்டதாகத் திரு அன்ரன் பாலசிங்கம் பத்திரிகையாளரிடம் தெரிவித்தார்.

இவற்றுக்கான காலதாமதத்தை அரசு தவிர்க்க வேண்டுமெனவும் காலதாமதம் ஏற்பட்டால் பாரியவிளைவுகளும் சிக்கல்களும் ஏற்படுமென்றும் அரசிற்கு எடுத்துரைக்கப்பட்டது.

தற்போதுள்ள அரசியல் வெற்றிடம் நீடிக்குமாயின் விடுதலைப்புலிகள் ஜனநாயக அரசியல் நீரோட்டத்தில் ஈடுபடத் தடையாக இருக்குமெனவும் தெரிவிக்கப்பட்டது

பேச்சுக்களை விடுத்து உருப்படியான நடவடிக்கைகளை மேற்கொண்டு ஜனநாயக சூழ்நிலையில் தேர்தலை நடத்தவும் விடுதலைப்புலிகள் அரசியலில் கலக்க புறநிலைகளை உருவாக்கவும் வேண்டுமென்றும் கேட்கப்பட்டது என்று பாலசிங்கம் தெரிவித்தார்,

## விபத்தில் பலி

கோப்பாய் தெற்கைச் சேர்ந்த அப்பையா விக்னேஸ்வரன் (22) என்பவர் மோட்டார் சைக்கிள்விபத்திற் சிக்கி மரணமானார்.

இச்சம்பவம் நேற்று முந்தினம் இருபாலையில் நண்பகல் 12 45 மணியளவில் இடம் பெற்றது. (4)

## தேர்தலில்...

கள் தேர்தற் கூட்டங்கள் நடாத்த தாம் தடையாக இருக்க மாட்டோம் என்றும் தெரிவித்துள்ளனர்.

நேற்றைய அரசு புலிகள் பேச்சின்போது அமைச்சர் ஹமீத்திடம் மேற்படி தெரிவிக்கப்பட்டதாகப் புலிகள் வட்டாரங்கள் தெரிவித்தன.

## ஜனாதிபதி...

யுள்ளதாக தெரியவருகின்றது

ஈ. பி. ஆர். எல். எப். புடன் அரசு நடாத்தும் பேச்சுக்கள் குறித்து கடும் ஆட்சேபமும் அதிருப்தியும் தெரிவித்துள்ளனர்.

## வடமாராட்சி...

இதே சமயம் வடமராட்சியை அண்டியுள்ள கடற்பகுதியில் அடிக்கடி ஷெல் அடிச் சத்தங்களும் கேட்டவண்ணமுள்ளன. (39)

## ஆங்கிலச் சான்றிதழ்

லண்டன் ஆங்கிலப் பரீட்சையில் சித்தியெய்திய மாணவர்களுக்கான சான்றிதழ்கள் வழங்கப்படும் வைபவமானது எதிர்வரும் 24ம் திகதி சென் ஜோன்ஸ் கல்லூரி மண்டபத்தில் பிற்பகல் 4மணியளவில் இடம் பெறும்.

இவ் வைபவத்தின் போது பிரிட்டிஷ் தூதுவர் டேவிட் கிளாட்ஸ்ரோனும் அவரது மனைவி அப்றீ கிளாட்ஸ்ரோனும் பிரதம விருந்தினர்களாக கலந்து கொள்வர்.

## சுண்டிக்குளி மகளிர் கல்லூரியில்


கவிஞர் தேவதாசனால் பாடப்பட்ட 'வித்துக்கள்' தென்மோடி நாட்டுக்கூத்தின் நூல் அறிமுக விழா நாளை காலை சுண்டிக்குளி மகளிர் கல்லூரியில் இடம் பெறவுள்ளது,

இது சுண்டிக்குளி மகளிர் கல்லூரி உயர்தர வகுப்பு மாணவ மண்றத்தின் ஆதரவில் இடம் பெறுகின்றது. தலைமை உரையை செல்வி மீரா' இராஜரட்ணமும் கருத்துரைகளை வண. பிதா எஸ். கிலரி ஜெபநேசனும், கவிஞர் தேவதாசனும்வழங்குவார்கள்

## வட, கிழக்கு...

டுத்துகின்றது என்றும் திருமலையில் அரசு அகற்றுவதாக கூறிய சிறிய ராணுவ முகாம்களை மாறாக அரசு பலப்படுத்துவதாகவும் விமானங்கள் மூலம் அரசு வேவு பார்ப்பதாக புலிகள் தரப்பில் சுட்டிக்காட்டப்பட்டது.

இதற்குப்பதிலளித்த ஹமீத் புதிய துருப்புக்களை விட்டு பழைய துருப்புக்களை எடுப்பதாகவும் (Turn over Troops) அது வெளிப்பார்வைக்கு பலப்படுத்துவது போல் உள்ளதாகவும் தெரிவித்தார்.



நேற்று நடைபெற்ற பிதா லோங் அடிகளாரின் முத்திரை வெளியீட்டு வைபவத்தில் யாழ். ஆயர் என். தியோகுப்பிள்ளை ஆண்டகை, வடபிராந்திய தபால் அத்தியட்சகர் திரு. சேதுகாவலரிடம் முதல் தபால் தலையை பெறுவதைப் படத்தில் காணலாம்.

## சிற்றூர் அவைத்தலைவர் கொலை

கல்முனையில் விடுதலைப் புலிகளின் ஆதரவாளர் ஒருவர் சுட்டுக் கொல்லப்பட்டுள்ளார்.

கல்முனைகுடி சிற்றூரவைத் தலைவர் ஆலம்பாபா என்பவரே நேற்று முன்தினமிரவு சுட்டுக்கொல்லப்பட்டவராவர்

## தலைமையக அதிகாரிகள் யாழ். மாவட்ட விஜயம்

(சங்கானை)

கொழும்பிலுள்ள சுகாதார சேவைப் பணிப்பாளர் நாயகத்தின் அலுவலகத்தைச் சேர்ந்த பரிசோதனைக் குழுவொன்று யாழ். மாவட்டத்திற்கு வந்துள்ளது.

இக்குழுவினர் இப்பிரிவிலுள்ள அரசாங்க வைத்தியசாலைகளிலும் மற்றும் சுகாதாரததிணைக்கள நிறுவனங்களிலும் திடீர் பரிசோதனை, களை நடாத்தி வருகின்றனர்.

## தமிழ்..

I, தரம் II ஆகிய பதவி உயர்வுகளுக்காக நடாத்தப்படும் நேர்முகப்பரீட்சை, பதவி உயர்வு ஆகியவற்றில் ஒழுங்கினங்கள் ஏதும் ஏற்படுவது குறித்து தாம் கண்காணிக்கவுள்ளதாகவும் இராஜாங்க அமைச்சர் தெரிவித்துள்ளார்

எனவே பதவி உயர்வு முடிவுகள் வெளியாகும் போது அதில் ஏதும் அநீதி கண்டுபிடிக்கப்பட்டால் அது தொடர்பாக கல்விச் சேவை ஆணைகுழுவின் தலைவர் திரு ஜோர்ஜ் மென்டிஸ் அவர்களுக்கு பதிவுத்தபாலில் தமது முறைப்பாட்டை ஆதாரங்களுடன் அனுப்பி வைக்கும்படி தமிழ் ஆசிரியர்சங்க பொதுச் செயலர் த. மகாசிவம் கேட்டுள்ளார்.

## புலிகள்...

பாலசிங்கம், யாழ்மாவட்டத் தளபதி பானு, மகளிர் முன்னணித் தலைவி ஜெயா ஆகியோர் கலந்து கொண்டனர்

## தமிழர்

திரு பி.மகாதேவா ஆகியோருக்கு அதி உயர் பட்டமான 'தேசமான்ய' பட்டம் வழங்கப் பட்டது.

பரத நாட்டிய தாரகை, செல்வி வாசுகி சண்முகம் பிள்ளைக்கு 'கலாசூரி' முதல் தரப்பட்டம் வழங்கப்பட்டது.

## பயிலுநர்..

ரியர்களின் நான்கு பிரதிநிதிகளையும் நடைபெறவுள்ள இக் கூட்டத்திற்குத் தவறாது சமூகமளிக்குமாறு நல்லூர் உ. அ. அ. பிரிவிலுள்ள பயிலுநர் ஆசிரியர் சங்கச் செயலாளர் திரு எஸ். தயாபரன் கேட்டுக் கொள்கிறார்.


## அதிர்ஷ்டலாபச்சீட்டு முடிவுகள்

நேற்றுப் பிற்பகல் (22 . 05 . 90) நாயன்மார்கட்டு துர்க்கை அம்மன் தேவஸ்தான முன்றலில் நடைபெற்ற மேற்படி சீட்டிழுப்பு முடிவுகள்:-

| | |
|---|---|
| 1.ம் பரிசு | A 2019 |
| 2.ம் பரிசு | B 7706 |
| 3.ம் பரிசு | B 19749 |

மற்றும் 10 ஆறுதற் பரிசுகள்

| | | |
|---|---|---|
| 1. A 14380 | 4. B 5851 | 7, A 29860 |
| 2. A 24226 | 5. B 18738 | 8. B 10610 |
| 3. A 9379 | 6. A 16430 | 9. A 17587 |
| | | 10. C 30528 |

அதிர்ஷ்டசாலிகள் தங்கள் பரிசிற்குரிய டிக்கட்டுகளை பின்வரும் விலாசத்தில் சமர்ப்பித்துப் பரிசைப்பெற்றுக் கொள்ளலாம்.

**EUROPE CHINA HOTEL**

89, 2.nd Cross Street

JAFFNA.

05157


இப்பத்திரிகை முரசொலி பப்ளிஷர்ஸ்,[பிரைவேட்]லிமிற்றெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாண ஸ்ரான்லி வீதி 62ஆ இலக்கத்திலுள்ள அச்சகப்பிரிவில் 23.05-1990ல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது